காஞ்சி

20 காசு

8-6-69 நிறுவனர்: அண்ணாதுரை

பாசம் என்பது......!

—பெருங்காப்பியன்—

உடலைத் தகித்துக்கொண்டு வெளிப்பட்ட வியர்வையை அழுத்தித் துடைத்த மேல்துண்டை நான்காக மடித்து, ஒரு முனையைப் பிடித்து விசிறிக்கொண்டபடியே சப்பணமிட்டு அமர்ந்தான் ரங்கு.

பகலெல்லாம் உழைத்து அலுத்துப்போன இடுப்புக்குச் சற்று இதம் ஏற்படும் முறையில் சுவரில் முதுகைச் சாய்த்துவிட்டான்.

“அப்பா!...அப்பா!......காச்சு”—என்று கொச்சையாக வார்த்தையை உதிர்த்துக்கொண்டே, ரங்குவின் முகவாய்க் கட்டையைக் கிள்ளிவிட்டு அவன் மார்புமீது சாய்ந்தபடி, சப்பணமிட்ட தொடைமேல் உட்கார்ந்தான். அவனது மூத்த மகன் ராஜா. அவனுக்கு வயது நான்கிருக்கும்.

“பிச்சிப் பா...ப்பா...பிச்சி” என்று, ஜொள்ளொழுகும் வாயிலிருந்து ஓசையை வெளிக் கிளப்பி, ரங்குவின் கழுத்தை வளைத்துப் பிடித்து தோள்பட்டைமேல் சாய்ந்து தொங்கியபடி சிணுங்கினாள் இரண்டு வயது செல்வி.

“ஓடா ஒழச்சிபுட்டு ஆஞ்சி ஓஞ்சி கட்டையைக் கொண்டுவந்து போட்டா இப்படி புராண்டுதுங்களே! ராஜா! இப்படி வாடா, செல்வி குட்டி பிச்சி நான் தரேன் வாம்மா...” என்று ஆதங்கத்தோடு அவர்களை அழைத்தாள் ரங்குவின் அம்மா கோமதி.

செல்வியைத் தூக்கி இடுப்பில் வைத்தபடி, பெரியவனை நடத்திக் கொண்டு வாயிலுக்கு ஓரமாக இருந்த திண்ணைக்குச் சென்றாள். அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த பெரியவரிடம் இருவரையும் விட்டு, “தாத்தா கிட்டவே இருங்க, அப்பாவுக்குச் சோறு போட்டுட்டு வர்றேன்”—என்று உள்ளே வந்தாள்.

பாட்டிக்கும் ‘டுமிக்கி’, தாத்தாவுக்கும் ‘டுமிக்கி’ எனும் பாவனையில் அந்த பொடிசுகள் திண்ணையை விட்டிறங்கி, பாட்டியைப் பின் தொடர்ந்து வந்து ரங்குவினெதிரில் நின்றார்கள்.

அவர்களைத் திட்டவும் முடியாமல், தடுக்கவும் முடியாமல் கோமதி பதைபதைத்துப் போனாள். அந்தக் குழந்தைகளின்மீது அவளுக்கு அனுதாபந்தா னேற்பட்டது.

கழுவிய உணவுத் தட்டை ரங்குவினெதிரில் வைத்து சோறு அள்ளி வைத்தாள். அவனே குழம்பை யூற்றி பிசைந்து, ஒரு பிடி எடுத்து வாயில் போட சென்றான்.

எதிரில் வந்துநின்றராஜா கையை நீட்டி “அப்பா...சோச்சி” என்றான் உதட்டைக் கடித்துக் கொண்டே.

“ப்பா!...பூவா...” என்று பின்னாலேயே வந்து நின்றாள் செல்வி.

ரங்கு, கோபத்தோடு அனல் பரக்க இருவரையும் பார்த்தான். அள்ளிய சோற்றைத் தட்டிலேயே போட்டுவிட்டு, “அம்மா!...என்று கத்தினான்.

திண்ணையருகில் போய் நின்றவள், அலறிப் புடைத்து ஓடிவந்து, “என்னடா கொழந்தே” — என்று வெறித்து நின்றாள்.

‘பொழுதோட இதுங்களுக்கு வயிறு நிறைய போட்டு வைக்கக் கூடாது? இப்படி அலையுதுங்களே. அவ...இருந்தா இப்படியா இருக்கும்!”

“ஏண்டா இப்படி ஆத்திரப்படரே. உன்னோடு சாப்பிட அதுங்களுக்கு அப்படி ஆசை. அவ இருந்தா மட்டும் உங்கிட்டே வராதுங்களா என்ன? நானென்ன இதுங்களை வஞ்சனையா செய்யறேன், பேரப் புள்ளைகளைக் கொடுமை படுத்தினதா ஒருத்தருமே சொல்லினதில்லே. இதுக்குப் போயி அப்படி ஆத்திரப்படறியே! சாப்பிட்ரா.”—கோமதி பயந்தபடிதான் சொன்னாள் ரங்கு கொஞ்சம் முன்கோபி என்பது தெரிந்து.

அங்கேயே நின்று கொண்டிருந்தால் அவன் ஆத்திரம் அதிகரிக்கும் என்பதற்காக குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வெளியில் வந்து விட்டாள்.

சாப்பிடச் சென்றபோது, அங்கலாய்த்துக்கொண்டு குழந்தைகள் வந்து நின்றது ரங்குவுக்குத் தாள முடியவில்லை. இரவு பகலாக வேலை செய்து அலுத்து வந்து நிம்மதியாக உட்கார்ந்து சாப்பிட முடியவில்லையே என்ற வெறுப்பு. அவன் மனைவி அலமு இறந்தபிறகு வீடே வெறிச்சோடி நிம்மதியற்று விட்டதாக எண்ணினான்.

அலமு அவன் நினைவுக்குள் புகுந்து வதைத்தாள் இத்தனைக் காலமாக அவன் ஏழ்மையைக்கூட நினைத்து வருத்தப்பட்டதேயில்லை. அந்த அளவு ‘அலமு’ குடும்பத்தை நடத்தி வந்தாள். அந்தத் திருப்தியே அவர்கள் குடும்பம் நிம்மதியாய் வாழவழியாயிருந்தது.

இரண்டு மாதத்துக்கு முன் பிரசவத்துக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அலமு, வீடு திரும்பவேயில்லை. வயிற்றுக்குள்ளேயே குழந்தை ஜீவித்து, முறையோடு வெளிக்கொணர முடியாததால் அவள் உயிரையும் வைத்தியர்களால் மீட்கமுடியாமல் போய் விட்டது.

அன்றிலிருந்து ரங்கு வெறும் இயந்திரகதியிலேயே நடமாடி வருகிறான். ‘ராஜா...செல்வி’—என்று சதா பாசத்தோடு துடித்துக்கொண்டிருந்தவனுக்கு, அவைகளின் கொஞ்சலே இப்போது வெறுப்பாகத் தானிருந்தது. சில நேரங்களில் ஏற்படும் அனுதாபம், மன வெறுப்பினாலேயே மறையத் தொடங்கியது.

கையிலள்ளிய சோற்றைத் தட்டிலேயே போட்டுவிட்டு, எழுந்து கையைக்கழுவி, துண்டில் துடைத்தபடியே வெளியில் கிளம்ப காலணியை மாட்டினான்.

அவன் தாய் பதைத்துப் போனாள்.

குழந்தைகள் ‘அப்பா’ என்று அவன் காலைக் கட்டிக்கொண்டார்கள். வேகமாக விலக்கிவிட்டு விர்ரென்று நடந்தான்.

“ஏண்டா ரங்கு! சரியாக்கூட சாப்பிடாம வந்தவுடனே எங்கேடா போறே...? என்னவோ குழந்திங்க

(14-ம் பக்கம் பார்க்க)

முகப்பில்:

மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களது எழுத்துத் தொண்டினைப் பாராட்டி—திருமிகு இராணி அம்மையார் அவர்களிடம் தற்காலிகக் [illegible]யரசுத்தலைவர் வி. [illegible] அவர்கள் கேட[illegible] காட்சி.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 8—6—69 | இதழ் 47

மக்களை வாழவிடுங்கள்!

அகில உலகக் கண்ணோட்டம் இருப்பதனாலேயே கம்யூனிஸ்டுகள், வட்டாரச் சூழ்நிலைகளை அனுசரித்து ஒத்துப்போக முடிவதில்லை என்று பொதுப்படையாகக் கூறப்படும் குற்றச்சாட்டினை மெய்ப்பிப்பதைப் போல்தான் விவகாரங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன கேரளாவில்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி என்ற பெயரில் இயங்கிவந்த நிறுவனம், இரண்டாகப் பிளவுபட்டு மார்க்சிஸ்டு கட்சியென்றும் கம்யூனிஸ்டு கட்சியென்றும் இயங்கத் தொடங்கியபோதே சிந்தாந்தப் போர் தொடங்கிவிட்டது என்று கணித்துக் கூறப்பட்டது.

அகில உலகத்திலுமுள்ள பாட்டாளி—தொழிலாளி வர்க்கத்தை ஒரு குடைக்கீழே கொண்டுவந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஏந்தியிருந்தவர்களே இரண்டாகப் பிளவுண்டார்கள் என்றால் தாங்களுக்குத் தாங்களே ஒத்துப்போக முடியாத தன்மையினை வளர்த்துக்கொண்டுவிட்டார்கள் என்றால், அவர்களது குரலுக்கு எந்த அளவு ஒத்துழைப்பைத் தரமுடியும் என்பது வினாக்குறியாகவே நிற்கும்.

ஒற்றுமையைப்பற்றி பேசுபவர்களே உடைந்து காணப்படும் போக்கு விபரீதமான நிலையைத்தான் தோற்றுவிக்கும். அதன் எதிரொலிதான் வலதுசாரி—இடதுசாரி என்ற ரீதியில் கம்யூனிஸ்டுக் கட்சி பிளவுபட்ட நிகழ்ச்சியாக நிற்கிறது. போதாக்குறைக்கு தீவிர கம்யூனிஸ்டுகள் என்ற பெயரில் நக்சல்பாரிகள் வேறு முளைவிட்டிருக்கிறார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சித்தாந்தங்கள் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்குப் பிடிக்கவில்லை. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சித்தாந்தங்கள் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஒத்துவரவில்லை. இரண்டு கட்சிகளின் சித்தாந்தங்களுமே தீவிர கம்யூனிஸ்டு கட்சிக்குப் பிடிக்கவில்லை.

எனவேதான் குழப்பங்கள் மூண்டு அவை கலவரங்கள் என்று வருணிக்கத்தக்க அளவை எட்டிவிடுகின்றன. மூன்றாக இயங்கிக்கொண்டிருக்கும் எந்தவொரு கம்யூனிஸ்டு கட்சியும் "பரந்த" கண்ணோட்டத்தை விடுத்து "வட்டார" கண்ணோட்டத்துக்குத் திரும்பினால் ஒருவேளை சித்தாந்த ஒற்றுமைகள் ஏற்படக் கூடும்.

"வட்டார"க் கண்ணோட்டம் என்பது பகுதி மக்களைக் குறிப்பதாகும். எந்தவொரு அரசியல் கட்சியானாலும், அந்தக் கட்சி சில பல கொள்கைகளின் அடிப்படையில் மக்களது நலனுக்கு என்றேதான் செயல்படவேண்டும். ஆனால் கம்யூனிஸ்டுகளின் அண்மைக் கால நடவடிக்கைகளைக் காணும்போது, முறையாகத் தொகுத்து ஆராயும்போது அக்கட்சி நாட்டு மக்களது நலனை வளர்ப்பதைவிட, தத்தம் கட்சி நலனையே முக்கியப் பிரச்னையாகக் கருதி செயல்பட்டு வந்திருப்பதனை உணரக்கூடும்.

ஒவ்வொரு கம்யூனிஸ்டு கட்சியும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய கட்டாயம் அல்லது நிர்ப்பந்தம் ஏற்பட்டதன் காரணமே, அவை பிளவுபட்டுப் போனதாகத்தானிருக்க முடியும். பிளவுண்ட நிலையில் தத்தம் செல்வாக்கை நிலை நிறுத்திக்கொள்ளப் பாடுபட வேண்டியது அவசியமாகிவிடுகிறது. இந்த அவசியம் ஏற்பட்டு விடுகிறபோது மக்கள் நலனைவிட, கட்சியின் பலத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டியதாகி விடுகிறது.

இப்படித்தான் கேரளாவில் வலது—இடது கட்சிகளுக்கிடையே போட்டியும் பூசலும் ஏற்பட்டு படாத பாடுபட்டு அமைந்த — காங்கிரஸ் சர்வாதிகாரத்தை எதிர்த்து அமைந்த ஒரு ஜனநாயக அரசையே கலைத்து விட வேண்டிய நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

கட்சிக் குழப்பங்கள் காரணமாக ஒரு அரசே கவிழும் நிலையேற்படுத்தப் படுமானால், அதைவிட ஒரு ஜனநாயகப் படுகொலை இருக்கமுடியாது. அத்துடன் அச்செயலில் ஈடுபடுவோர் ஜனநாயகத்தில் நம்பிகைக் கொண்டிருக்கிறார்கள் என்றும் நம்பமுடியாது.

கேரளாவில் சென்றமுறை நடந்த பொதுத்தேர்தலில் காங்கிரசல்லாத கட்சிகள் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றிய போதிலும், சட்டமன்றமே கூடி அமைச்சரவை அமைக்கக் கூடாதவாறு தடுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்கக் கூடாதவாறு மறுக்கப்பட்டு குடியரசுத் தலைவரின் ஆட்சியென பிரகடனப்படுத்தப்பட்டபோதே இந்த கம்யூனிஸ்டுகள் ஒரு வரையறையை வகுத்துச் செயல்பட்டிருந்தால் மக்களது நலனை மட்டுமே கருதக்கூடிய விதத்தில் செயல் பட்டிருந்தால் இபபோதைய இந்த பயங்கர விளைவைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

ஒவ்வொருவருடைய கட்சி வலிவையும் சோதனைக் காட்படுத்தத் தொடங்கியதன் எதிரொலியை இப்போது கேரளாவில் எல்லா அரசியல் கட்சிகளுமே அறுவடை செய்துகொண்டிருக்கின்றன. கட்சி நிலையைக் கடந்த பொதுமக்கள்தான் இந்த விளைவை ஏற்க வேண்டியவர்களாகி விடுகிறார்கள் என்று அறிகிறபோது. ஆத்திரம் அரசியல் கட்சிகளின்பால் திரும்பாது என்று யாரால் கூறமுடியும்.

இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கொஞ்சம் அதிக வலிவு இருப்பது போன்ற பிரமையில் வலது கம்யூனிஸ்டு கட்சியின் செல்வாக்கைக் குறைத்துவிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள். கேரள முதல்வர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து வலதுசாரி கட்சிகள் ஏதோ ஒரு பெரிய சதியைச் செய்திருப்பதாகவும், அதை அம்பலப்படுத்திவிடப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

பதில் சொல்லக் கடமைப்பட்ட வலதுசாரிகளோ, ஈ. எம். எஸ். எடுத்துக்கொண்ட பல அரசாங்க நடவடிக்கைகள் எந்த அளவுக்கு பொதுமக்களது நலனைக் குந்தகப்படுத்தியிருக்கிறது என்பதனையும், அவை

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

நிதியமைச்சர் சுப்ரமணியனார் போர்க்கோலத்துடன் வந்து நிற்கிறார்.

மெத்தக் கோபத்துடன் அவர் இருக்கிறார் என்பதும் தெரிகிறது, கோபம் ஏன் அவ்வளவு கொந்தளிக்கிறது என்பதும் புரிகிறது.

செல்லுமிடமெல்லாம் அவருக்குச் சொல்லுகிறார்கள் 'ஊழியர்கள்' — நமது கழகம் வளர்ச்சி அடைந்திருப்பதனை!

"கூட்டம் குறைவுதான்"

"பரவாயில்லையே/ சென்ற மாதம் காமராஜர் வந்தபோது இதிலே கால் வாசிதான் இருக்கும்"

"அப்படியா......இந்த ஊரில் மக்களுக்குப் போதுமான அரசியல் விழிப் புணர்ச்சி இல்லை........பொதுக்கூட்டத்திற்கு வருவதில் ஆவல் எழாததற்கு அதுதான் காரணமாக இருக்கவேண்டும்......"

"அப்படிச் சொல்லிவிடுவதற்கில்லை......"

"ஏன்?......என்ன......!"

"முன்னேற்றக் கழகத்தார் கூட்டம் போட்டால்......!"

"முன்னேற்றக் கழகம் ஒரு கட்சியா?...... அடுக்குமொழி பேசிடும் ஆள் மயக்கிக் கூட்டம். அதுகளுக்கு அரசியல் என்ன தெரியும்......"

"அதுசரி, அதுசரி......ஆனால் இந்த ஜனங்கள்......"

"குப்பையில் தள்ளுங்கள்......பெரிய கூட்டமா அவர்கள் வந்தபோது?"

"ஆமாம்......பிரமாண்டம்......அதைப் பார்த்த பிறகுதான் நம்ம பேச்சி முத்து.-தேர்தலில் இறங்கவே தயங்குகிறார்."

"அப்படியா! இன்று வெளுத்து வாங்கிவிடுகிறேன், முன்னேற்றக் கழகத்தை......"

இப்படி உரையாடல் நடந்தான பிறகு, பொதுக்கூட்டம் சென்றிடவும் 'பிரமுகர்கள்' அவரை வரவேற்கவும், பொதுமக்கள் ஆர்வம் காட்டாமலிருக்கவும் கண்டவுடன், நிதி அமைச்சருக்குக் கோபம் கோபமாக வருகிறது, கொக்கரிக்கிறார்.

அறைகூவுகிறார் அமைச்சர்!!

எதிர்கட்சி இலக்கணம் எதுவென்பீரோ?

இந்தக் கிழமை, தம்பி, சென்ற இடமெல்லாம், எங்கே அந்த அண்ணாத்துரை? பிடித்திழுத்து வாருங்கள்!—என்று கேட்பதுபோலவே, சீற்றத்துடன் பேசியிருக்கிறார். நான் வருத்தமடைகிறேன், மெத்தவும் அவருக்கு 'வேலை' கொடுத்துவிட்டதற்காக.

திட்டம எங்கே? திட்டம் எங்கே காட்டட்டும்! நீட்டட்டும்! பார்க்கிறேன்! நிபுணர்களை, அழைக்கிறேன்! அவர்கள் அளித்திடும் தீர்ப்பை ஏற்கிறேன்! என் பதவியைக்கூடத் துறக்கிறேன்!—என்று ஒரே வீராவேசமாகப் பேசியிருக்கிறார்.

தேர்தல் நேரமல்லவா—தீ பறக்க வேண்டுமே—அப்போதுதானே ஐம்பது ஆயிரமானாலும் இலட்சமானாலும பரவாயில்லை என்று வீசி எறிந்து தேர்தல் வேட்டையில் ஈடுபட 'ஆட்கள்' தைரியம் பெறமுடியும். அதற்காகப் பாபம், அமைச்சர் ஆலாய்ப் பறக்கிறார், 'ஆலகாலம்' கக்கப்பார்க்கிறார். அவர் உதிர்த்துள்ள 'முத்துகளை' சிந்தாமல் சிதறாமலெடுத்து ஏடுகள் வெளியிட்டுத் தமது தேசியத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளன! தேசீயத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அந்த ஏடுகள், மக்களுக்குத் தெளிவும் அளிக்க வேண்டும் என்ற பொறுப்பையும் கவனித்து நடப்பதானால், நான் எடுத்துக் கூறும் பேச்சையும், குலைக்காமல் வெளியிட வேண்டும். அந்தப் பண்பு ஏது? இருந்தால் ஜனநாயகம் ஏன் இன்று கேலிக்கூத்தாகிக் கிடக்கிறது! அது கிடக்கட்டும். நீண்டகால வியாதி உடம்போடு ஒட்டிக்கொண்டது!

என்மீது இத்துணை எரிச்சல் கொள்ள என்ன காரணம் நிதி அமைச்சருக்கு?

சாதாரணமாக, நிதி அமைச்சர், நம் பிரச்னைகளை—பேச்சுகளைத் தமது மேலான கவனத்துக்கு உரியன என்றே கருதுவது கிடையாது. நிதியும் மதியும், ஒரு சேரத் தம்மிடம் சிறைப்பட்டிருப்பதால், அவர் பண்டைக்காலப் பாதுஷாக்கள்போல, ஊர்ப் பிரமுகர்கள் தரும் உக்காவைப் பிடித்துக்கொண்டு, ஊஹும்... ஆஹாம்...பேசிக்கொண்டு உலா வந்தால்போதும், கழகத்தார் பற்றிக் கவனிப்பதே, தமது மேலான நிலைக்கு ஏற்றதாகாது என்று எண்ணிக்கொள்பவர், எனினும இந்தக் கிழமை முழுவதும் அவர், கரூரிலும், மதுரையிலும், திருச்சியிலும் செல்லுமிடமெங்கணும், பொதுவாக முன்னேற்றக் கழகத்தையும், குறிப்பாக என்னையும் 'போடு போடு' என்று போட்டுவிட்டதாகக் கருதிக்கொண்டு தம்முடைய பலவீனத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

1. திராவிட முன்னேற்றக், கழகம் சரியான முறையில் அமைந்த எதிர்க்கட்சி அல்ல.
2. திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு அரசியலே தெரியாது.
3. அடுக்குமொழி பேசுவார்கள் — அனாவசியமாக எதிர்ப்பார்கள்
4. அவர்களுக்கு நாட்டிலே ஆதரவே கிடையாது.

இவை நிதியமைச்சரின் மொழிகள்—மதிமிகு மொழிகள் என்று அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார்—அவராவது அவ்விதம் எண்ணிக் கொள்ளாவிட்டால், வேறு யார் துணைவரப்போகிறார்கள்.

எதிர்க்கட்சி என்பதற்கு என்ன இலக்கணம் காண்கிறார் நிதி அமைச்சர்—அவர் படித்துள்ள அரசியலில்—படித்திருந்தால்!—என்று அறியநான் மிகவும் ஆவல் கொண்டுள்ளேன்.

அவர் பேசுவதிலிருந்து, நான் யூகித்துக்கொள்ள என்ன இருக்கிறது?

கம்யூனிஸ்டு கட்சி கெட்டது.

சோஷலிஸ்டுகள் கெட்டவர்கள்.

முன்னேற்றக் கழகம் மிக மிகக் கெட்ட கட்சி.

இப்படி எல்லாவற்றையும் கண்டித்துவிட்டு, எதை எதிர்க் கட்சி என்று இவர் கூறுகிறார்? ஒரு சமயம், உண்மையான எதிர்க் கட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதை எடுத்துக் காட்டவே, காங்கிரசிலே இருந்தே சிலரை இவர் அழைத்துக்கொண்டு வெளியே கிளம்பி, எதிர்க் கட்சியாக்கி, அரசியல் 'சேவை' செய்யப் போகிறாரோ என்னவோ? யார் கண்டார்கள்!

ஆளும் கட்சியில் வளரும் சர்வாதிகாரத்தைக் கண்டிப்பது;

ஆளும் கட்சி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததை அம்பலப்படுத்துவது.

ஆளும் கட்சியின் அமுலில் ஏற்படும் அல்லலை, அவதியை எடுத்துக் காட்டுவது.

ஆளும் கட்சியின் சட்ட திட்டங்களும், நிர்வாக முறைகளும் ஏழைகளை எவ்விதத்தில் கெடுக்கிறது என்பதை எடுத்துரைப்பது.

ஆளும்கட்சி, என்னென்னவிதமான இதமளிக்கும் சட்டம் செய்திருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவது. உரிமையையும் உடைமையையும் பறி கொடுக்கும் போக்கில் ஆளும் கட்சி நடந்து கொள்ளும் போது, கண்டிப்பது எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துவது.

இவைபோன்றவைதாம், எதிர்க் கட்சிகளுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் என்று நான் படித்த—அதிக அளவு படிக்கவில்லை, ஆனால் படித்தவரையில், கவனத்துடன் படித்திருக்கிறேன்—அரசியல் விளக்க ஏடுகளில் காணப்படுகின்றன.

எதிர்க் கட்சிகளுக்கு இருக்கவேண்டிய இந்த இலட்சணங்கள், யாரிடம், எந்த வகையிலே இல்லை என்பதை எடுத்து விளக்கிட இந்த வீராதி வீரர் முன் வரவில்லை—அதை விட்டு விட்டு ஓஹோ! இவைகளெல்லாம் கட்சிகளே அல்ல, என்று கூறிவிடுகிறார்.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதை உண்டல்லவா, அதுபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கத்தில் இன்ன தவறு, போக்கில் இந்த விதமான கோளாறு இருக்கிறது என்று எடுத்துக்காட்ட வக்கற்ற இந்த வக்கீல், இந்தக் கழகத்தார், முன்பு வெள்ளையர் ஆட்சியிலே வெண்சாமரம் வீசினவர்கள் என்று குதர்க்கம் பேசிவருகிறார்.

இன்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களில் — முக்கியஸ்தர்களில் — யார் வெள்ளையருக்கு வெண்சாமரம் வீசினவர்கள்—யார் பதவியில் இருந்தவர்—யார் வெள்ளையனிடம் பணம் வாங்கி வேலை பார்த்தவர்கள், என்பதை எடுத்துக் காட்டும்படி, 'ஆரசம் ஹார'க் கோலம் பூண்டு சுற்றி வரும் இந்தச் சுப்பரமணியனாரைக் கேட்கிறேன்.

'அல்லாடி' தொட்டது அரசியல் சாசனம்!

எப்போது ஜஸ்டிஸ் கட்சி, சேலத்தில் திராவிடர் கழகமாக மாறிற்ருே, அன்ருே, களங்கம் துடைக்கப் பட்டது. 'கழுவி விட்டதை'க் காங்கிரஸ் தங்கக் கலயத்தில் அல்லவா ஏந்திக்கொணடது?

நாமறியோமா, நாடு அறியாதா, இந்தச் சேதியை?

வெள்ளையனிடம் சுளை சுளையாகப் பணம் பெற்றுக் கொண்டு, அவன் காலைத்தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டவர்களை, கட்டி அணைத்துக்கொண்டது காங்கிரஸ் என்பதை விளக்க எத்தனை எடுத்துக்காட்டு வேண்டும்! மந்த மதியினரும் இதனை அறிந்துகொள்ள முடியுமே!

அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் யார்? அலிபுரம் சிறையில் அவதிப்பட்ட தேசியத் தொண்டரோ!! வெள்ளையர் ஆட்சியை ஒழித்திட வீரப் போரிட்ட சிதம்பரனருடன் கூடிச் செக்கிழுத்தவரோ! அன்னிய ஆட்சிக்கு அடங்கிக் கிடக்கமாட்டேன் என்று ஆர்த்தெழுந்த வைக்கம் வீரருக்கு வலது கரமோ? தேசத்தை அடிமை கொண்டவனுடன் உறவு கொள்ளமாட்டேன் என்று கூறி, 'உத்யோகத்தை' உதறி எறிந்த தியாகியோ? நாடு கேட்காதா, நாப்பறை அறையும் இந்த அமைச்சரை? ஐயா! அமைச்சரே! அண்ணுத்துரையும் அவன் சார்ந்துள்ள கழகத்தினரும், வெள்ளையரை ஒழித்திடும் வீரப் போர் புரிந்தவர்களல்லர். எனவே அவர்கள், எமது ஆட்சியிலுள்ள அலங்கோலத்தை எடுத்துக் கூறிஞல் கேளேன், எவரும் கேளார் என்று விசித்திர வாதம் புரிகிறீரே, இந்த அல்லாடி யார், கூறும் கேட்போம், என்ருல் பதில் ஏது கூறுவார்! நான் கூறுகிறேன், தம்பி, நாடறிந்த உண்மையை, அதை மறுத்திடவாவது முன்வருகிருரா, கேள், இந்த மந்திரியை!

அல்லாடி—ஒரு, சர்! ஆங்கில அரசு தந்த பட்டம், அட்வகேட் ஜெனரல் பதவி—ஆங்கில அரசு வீசிய எலும்புத்துண்டு என்றுரைக்கவேண்டும் அமைச்சரின் பாஷையில்! அவரை அல்லவா, அடிபணிந்து அழைத்து, இவர்கள், அரசியல் சட்டம் தீட்டும் வேலையைத் தந்தனர்!

தேசத்துரோகி—இவர் தீண்டக்கூடாது எமது விடுதலைச் சாசனத்தை என்ரு கூறினர்.

தேடித் தேடிப் பிடித்திழுத்து வந்தனர், தேசியத் தலைவர்கள்; அவர் திருவடி சரணம் என்று கிடந்தனர்.

அமைச்சரின் அறிவாற்றல் என்ன செய்துகொண்டிருந்தது? அல்லாடியை அழைக்காதே! அவமானத்தைத் தேடாதே! என்ரு இவர் ஆர்ப்பரித்தார்!

அல்லாடி, அரசியல் சட்டத்தைத் தீட்டிக்கொண்டிருந்தபோது இந்த அமைச்சர் இருந்த திக்கும் தெரியாது நாட்டு மக்களுக்கு! இன்று இளித்து நிற்கவும், இனிப்பாகப் பேசவும், பதவியின் காரணமாக நாலுபேர் நத்திக்கிடக்கக் கிடைத்துவிட்டார்கள் என்பதனுல் உண்டான போதையில், போதகாசிரியரா கிருர்—வெள்ளையன் காலத்தில் இந்தக் கழகத்தார் என்ன செய்தார்கள் தெரியுமா என்று விளாஞரம் பேசுகிருர்.

கலெக்டர் வேலையில் காலடி வைத்து, காஷ்மீர் திவான் வேலை வரையில் உயர்ந்து, உள்ளே நுழையாதே! என்று உத்திரவிட்டு, நேரு பண்டிதரின் மார்புக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டிடும் துணிவுடன் துரைத்தனம் நடத்திய கோபாலசாமி ஐயங்காரல்லவா, மந்திரியானுர்! அபபோது, மானமும் ரோஷமும் எங்கே போய்க் குடிபுகுந்தது? வெள்ளை ஏகாதிபத்யத்தின் செல்லப்பிள்ளையாயிற்றே இந்த கோபாலசாமியார்! இவரைக் காங்கிரசாட்சியிலே காராக்கிரகத்தில் தள்ளுவார்கள், கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லுவார்கள், எந்தத் துப்பாக்கி முனையை நேருபண்டிதரின் மார்பிலே வைத்தாரோ, அதே துப்பாக்கி முனையை இவருடைய முதுகிலே குத்தி விரட்டுவார்கள் என்றெல்லாம் முழக்கமிட்டனரே காங்கிரஸ் பேச்சாளர்கள், வெட்கமின்றி அவரை அழைத்து 'சோட சோபசாரம்' நடாத்தி, 'சுபசோபனம்' பாடி, பாதுகாப்பு இலாகா, மந்திரியாக்கிக் கொள்கிருேமே உலகு கைகொட்டிச் சிரிக்காதா, என்று, அன்று எண்ணிய தன்மானத் தலைவர் யார்? காட்டச் சொல்லுங்கள்! இன்று துள்ளி வருகுது வேல்! தூர விலகி நில்! என்று துந்துபி முழக்கிடும் இந்தத் தூயவராவது வாய் திறந்தாரோ! இவர் இருப்பதையே நாடு கவனிக்கவில்லை அந்த நாட்களில்!! இன்று, வீரம் சொட்டுகிறது பேச்சில்—அன்று அசடு வழிந்தது இவர் போன்ருர் முகத்தில்! ஆங்கில ஆட்சியின்போது எத்துணை ஜொலிப்புடன் இருந்தாரோ, அதே பளபளப்புடன், கொலு வீற்றிருந்தார் கோபாலசாமி ஐயங்கார்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்திடும் வீரப் போருக்கு முத்துராமலிங்கத் தேவர் தேவைப்பட்டார்—இன்று பசும்பொன் இருக்கவேண்டிய இடத்தில், பரங்கியருக்குப் பல்லக்குத் தூக்கிய சிற்றரசர் கூட்டத்தைச் சேர்ந்த இராமநாதபுரம் ராஜா அல்லவா வீற்றிருக்கிருர்! வெட்கங்கெட்ட நிலைக்கு, வேறென்ன எடுத்துக் காட்டுவேண்டும்.

தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும்.

ஏழைகள் ஈடேற்றப்படுவதற்கான திட்டம் வேண்டும்.

ஆட்சியாளர்கள் இதைச் செய்கிற வரையில் உண்ணுவிரதமிருக்கிறேன், என்று சங்கரலிங்க நாடார் எனும்காங்கிரஸ் தியாகி, அல்லற்படுகிருர்; அமைச்சர் அவையில் அமர்ந்துகொண்டு, என்ன ரகளை? என்ன கூச்சல்? என்று கேட்டிட, இராமசாமி படையாச்சியும மாணிக்கவேலரும் இருக்கிருர்கள், இது வேதனையைக் கிளறவில்லை, வெட்கத்தை மூட்டவில்லை, இந்த அமைச்சருக்கு; நாம் ஒரு காலத்திலே ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தோமாம், ஆகவே நம்மை மக்கள் ஆதரிக்கக் கூடாதாம்!!

யாரார் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் என்று மக்களால் சுட்டிக் காட்டப்பட முடியுமோ, அவர்களிலே பசைகொண்டோரிடமெல்லாம் நேசம் கொண்டு சுவைத்து, இன்புறுவதுதான் இன்றைய காங்கிரஸ், என்பதை யார்தான் அறிந்துகொள்ளவில்லை! ஊர் முழுவதையுமா ஒரு அமைச்சர் தமது அதிகாரப் பேச்சினுலே உண்மையை மறந்துவிடச் செய்யமுடியும்?

எனவே தம்பி சொத்தை வாதத்தை மெத்தச் சிரமப்பட்டு, மெச்சுவதற்கு யார் கிடைக்காவிட்டாலும், அடுத்ததேர்தலுக்கு மனுப்போட்டிருக்கும் மகானுபாவர்களாவது பாராட்டுவர் என்ற எண்ணத்தில் அமைச்சர்

'பெட்டியை'க் கண்டு 'மொட்டை'க்குக் கோபம்!

பேசுகிறார். அந்த மகானுபாவர்களிலே பலரும், ஜஸ்டிசில் இருந்தவர்கள்!!

மற்றோர் பெரிய தவறு நாம் செய்கிறோமாம்—தேமதுரத் தமிழோசை அவர் செவியைத் துளைக்கிறதாம்! ஏனடா, தம்பி, தமிழின் எழில் விளங்கப் பேசுகிறாய்? பார்! அமைச்சருக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறது; அமைதி அழிகிறது; அழுது விடுவார் போலிருக்கிறது; நானேகூடச் சொல்லலாமென்று இருக்கிறேன்—நீயும் சொல்லு—மலையினின்றும் கிளம்பும் சிற்றாறின் ஒலியோ, மங்கை நல்லாள் மதலைக்கு முத்தமிட்டுக் கொஞ்சும் போதும், மணவாளனிடம் பேசி மகிழ்ந்திருக்கும் வேளையிலும் கேட்கக் கிடைக்கும் சிரிப்பொலியோ, வாட்போரின்போது கேட்கும் ஓசையோ, தென்றலோ, புயலோ, தேனோ, என்றெல்லாம் பலரும் பலப்பட எண்ணி மகிழத்தக்க விதமாக, இனிப் பேசி இந்த அமைச்சரின் இதயத்தை வாட்டாமலிருக்கும்படி நமது நாவலருக்கும், மற்றையோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

சீவிச் சிங்காரித்துக்கொண்டு, முல்லை சூடி, முறுவலுடன், இடுப்பில் குழந்தையுடன் இதயத்தில் மகிழ்ச்சியுடன் இளநங்கை செல்லக் கண்டால் பதியை இழந்ததால் பசுமை உலர்ந்துபோன பரிதாபத்துக்குரிய 'மொட்டை'க்குக் கோபமும் சோகமும் பீறிட்டுக் கொண்டுதானே வரும்! அமைச்சருக்கு நாம் ஏன் அந்த அல்லல் தரவேண்டும்!!

அவர் நமது கழகத் தோழர்கள் பேசும் மொழியில் ஏற்றமும் எழிலும் இருந்திடக் காண்கிறார்—எரிச்சல் பிறக்கிறது—அதை மறைத்துக்கொள்ளும் ஆற்றலும் அற்றுப்போய், அழகாகப் பேசி, அடுக்குமொழி பேசி, மயக்கிவிடுகிறார்கள் என்று கூறி மாரடித்து அழுகிறார்! நாம் என்ன செய்வது, தம்பி, வேண்டுமென்றே, தமிழின் இனிமையைத் தேடிப் பிடித்திழுத்தா வருகிறோம். தமிழ் உள்ளம் நமக்குத் தமிழ் இனிமையைத் தருகிறது. அமைச்சரின் நிலை அது அல்லவே.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவேண்டிய நிர்பந்தம் தாக்குகிறது.

உண்மை தெரிகிறது, அதை மறைத்தால்தான் பதவி என்பது கிடைக்கிறது.

எந்தத் துறையிலே பார்த்தாலும் வடவர் வளம் பெறுவதையும் தென்னவர் திகைப்புண்டு கிடப்பதையும் அறிகிறார், உள்ளத்தில் சோக அலை கிளம்புகிறது. கோபப் புயல் வீசுகிறது, ஆனால் அந்த வெல்வெட் மெத்தையில் அமர்ந்து எண்ணிப் பார்க்கும்போது, தெற்குத் தேய்ந்தாலென்ன காய்ந்தாலென்ன, என்ன சுகம்! என்ன சுவை. இந்தப் பதவி! என்று சபலம் பிறக்கிறது; அமைச்சரின் பேச்சு, உள்ளத்தில் உள்ளதை மறைத்திடப் பயன்படுத்தப்படுகிறது. அதனாலேயே பேச்சிலே சூடு இருந்தால் சுவை இல்லை, சுத்தம் இல்லை! சூட்சமம் அதுவே தவிர அவருக்கென்ன அகமும் புறமும் படித்திட, தமிழின் அருமையும் இனிமையும் அறிந்திட, எதுகை மோனையை அழைத்திட, எழிலும் சுவையும் பெற்றிடவா இயலாது! நம்மைவிட அதிகம் முடியும்!! ஆனால் உள்ளத் தூய்மைவேண்டுமே! கொள்கை ஆர்வம் தேவையாயிற்றே! தெளிவும் துணிவும் நிரம்ப வேண்டுமே! அதை எங்ஙனம் அவர் பெறுதல் இயலும் —அமைச்சராயிற்றே!

அமைச்சர் பேசியதாக 'தினமணி' கூறுகிறது நான் ஓர் மாபாதகம் செய்துவிட்டிருப்பதாக, அவர் மனச்சங்கடம் அடைந்திருக்கிறார் என்று தெரிகிறது, என்ன என்கிறாயா? கேள், தம்பி, நான் ரோமாபுரி ராணிகள்—ஓர் இரவு—என்றெல்லாம் ஏடுகள் எழுதினேனாம்—எனவே, இதுதான் இவர்கட்குத் தெரியும், வேறென்ன தெரியும்—என்று ஏளனம் செய்ய முற்படுகிறார். அமைச்சர் பெருமான்!

அமைச்சர் பெருமானுடைய கவனத்தை ஓர் இரவும் ரோமாபுரி ராணிகளும் ஈர்த்திருக்கும் உண்மை எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதல்லவா — மகிழ்ச்சி —மெத்த மகிழ்ச்சி. நரைதிரை மூப்பு என்பவைகளுக்கு ஆளான தொண்டு கிழங்களே, ரோமாபுரி ராணிகளிடம் சிக்கிக்கொண்டனர் என்றால், வாலிப முறுக்குக் குறையாத அமைச்சர் அவர்களிடம் சொக்கிப்போனதிலே ஆச்சரியமில்லை. ஆனால் இதிலே ஆச்சரியம் என்ன தெரியுமா தம்பி, கயல்விழி, மையல் மொழி, காட்டியும் ஊட்டியும் கட்டழகிகள் கருத்தைக் கெடுப்பர், காரியம் குலைப்பர். ரோம் சாம்ராஜ்யம் அழிந்துபட்டதற்கு வேல்விழி மாதரிடம் வாள் ஏந்திய வீரர்கள் அடிமைப்பட்டது ஒரு காரணம் என்று எச்சரிக்கை செய்ய நான் அந்த ஏடு எழுதினேன். அமைச்சர், பாவம் அதைப் படித்து, பெறவேண்டிய பாடம் பெறாமல், வேறு ஏதேதோ எண்ணங்களைப் பெற்று, மெத்தச் சிரமப்பட்டிருக்கிறார்போலும். அதனாலேதான் அவர் அத்துணை கோபத்துடன், ரோமாபுரி ராணி புத்தகம் எழுதியதைக் கூறியிருக்கிறார்.

அமைச்சரே! அலை மோதும், அடக்கிக்கொள்க! ஆசை வந்து உந்தும், ஆட்பட்டுவிட வேண்டாம். அந்த ஏடு, சுவையூட்டிச் சுருவளியை மூட்டிவிடும் சுந்தராங்கிகளிடம் அரசியல் உலகத்து அதிபர்கள், ஆழ்வார்கள், அடிவருடிகள் எனும் எவரும் சர்வஜாக்ரதையாக இருக்கவேண்டும், ஏனெனில், ரோம் சீரழிந்ததே கோலமயிலனையார், கண்டாரைக் கொல்லும் விழியால் தாங்கியதனால்தான் என்று எடுத்துக் கூறவே எழுதப்பட்டது அந்த ஏடு.

இது சபலம் எழும்போதெல்லாம் அமைச்சர் போன்று பெரிய நிலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் படித்துப் பாடம் பெற்று பதமும் பக்குவமும் கெடாதபடி தம்மையும் நாட்டையும் பாதுகாத்துக் கொள்ள உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதப்பட்டது.

படித்துவிட்டு பாடம்பெறாமல் பெருமூச்சு விடுவதும், ஆஹா! அந்தக் காலம், எப்படிப்பட்ட அருமையான காலம்! என்று ஏங்குவதும், இது அதுபோலவா? கண்டால் புன்னகை மலருகிறது, கைபட்டால் முகம் சுளித்துக்கொள்வதும் தெரிகிறது. தொட்டால் துவளும் போக்கு அல்லபோலும், கனியவைத்திடக் காலம் அதிகம் தேவைபோலும் என்றெல்லாம் எண்ணமிடுவதும், சிலருக்கு ஏற்படுகிறது எனின் குற்றம் என்னுடையதல்ல; கிடைத்த பாலை குழந்தைக்குத் தந்து மகிழ்ந்திடும் மதியூகியும் உண்டு—பாம்புப் புற்றுக்கு வார்த்துவிட்டு பரமபதத்துப் பேரேட்டிலே பெயர் பதிவாகிவிட்டது என்று எண்ணிக்கொள்ளும் ஏமாளியும் உண்டு! குற்றம், பாலில் இல்லை!!

இன்றுவரை இல்லையே, எழுதித்தந்தது!

அமைச்சர் இப்போது காங்கிரஸ் வட்டாரத்திலே இடறி விழுந்தால், ஓர் இரவு எனும் ஏட்டிலே நான் காட்டி இருக்கும் ஜெகவீரர் மீதுதான் விழவேண்டும்—அத்தகையோரின் கெடுமதியைக் கண்டிக்க ஏடு எழுதுவது எந்த வகையான குற்றமோ—எனக்குத் தெரியவில்லை—காலஞ் சென்ற 'கல்கி'யும் வ, ரா.வும் அவ்விதம் கூறவில்லை! அவர்கள் ஏதேனும் குறை காட்டியிருந்தால், நான் திருத்திக் கொண்டிருப்பேன். அமைச்சர் போன்றவர்கள் அந்த ஏடுகள் குறித்து ஏதேதோ பேசும் போது, எனக்கு அவர்கள் அந்த ஏடுகளிலிருந்து பெற வேண்டிய பாடத்தைப் பெறவில்லை என்றுதான் தெரிகிறது. அவர்களை எல்லாம் திருத்தும் ஆற்றலையா நான் பெற்றிருக்கிறேன்! நாட்டு மக்கள்தான் அவர்களைத் திருத்தவேண்டும். சீதையை இராவணன் சிறை பிடித்ததைக் கூறிடும் சம்பவத்தைக் கவி கூறுவது எதற்கு? அதுபோல ஒன்று கிடைக்காதா இராவணன்போல கெஞ்சிக்கிடக்காமல் வஞ்சியைப்பஞ்சணை விருந்தாக்கிக் கொள்ளலாமே, என்ற கெடுமதி பெறுவதற்கா?

ஓர் இரவு—ரோமாபுரி ராணிகள்-மேலிடத்தில் உள்ளவர்கள் ஒழுக்கத்தைத் துணைகொண்டால்தான் நாடு உருப்படும் என்ற உண்மையை உணர்த்தும் ஏடுகள்!

துரோபதை துகில் உரியப்படும் சம்பவத்தைப் படிக்கக் கேட்டு பரிதாபப்படவேண்டும், அதர்மம் இந்த அளவுக்கா போவது என்று கொதித்தெழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது முறை—துகிலா உரிந்தார்கள்...ஆஹா...பலே! பலே!...சொல்லு சொல்லு...எப்படி எப்படி உரிந்தார்கள்...என்று ரசித்துக் கேட்டபடி எதை எதையோ எண்ணிக்கொண்டு உதட்டை மடக்கிக் கடித்துக் கொள்ளும் உலுத்தர்கள் இருக்கத்தான் செய்வார்கள்! அதற்கென்ன செய்யலாம்.

கிடக்கட்டும், நான் வகைகெட்டவன் ஓர் இரவும், ரோமாபுரி ராணியும் குறித்து மட்டுமே எழுதினேன்; இதனை ஏளனம் செய்து எரிச்சல்பட்டுப் பேசுகிறாரே, இவர் தீட்டி. நாட்டவருக்குத் தந்துள்ள கேடு நீக்கிடும் ஏடுகள் யாவை?

இவர் தீட்டிய ஓர் அரசியல் விளக்க ஏடு வெளிவந்த பிறகுதான் உலகப் பெரும் தலைவர்கள் ஒன்றுகூடி உண்மையை உணர்ந்து ஐக்கிய நாடுகள் சபையையே அமைத்ததுபோலவும், இவர் அளித்த விஞ்ஞான விளக்க ஏட்டினைப் படித்த பிறகே ஈன்ஸ்டின் தத்துவத்தையே உலகு பெற்றது போலவும், இவர் கீதைக்குப் புது வியாக்யானம் தீட்டிடக் கண்டு கண்ணனே ஆச்சாரியார் கனவில் தோன்றி, கண்ணன் காட்டிய வழி என்று நீர் வெளியிட்ட ஏடு சரியில்லை, நமது பக்தன் பண்டித சிகாமணி சுப்ரமணியம் தீட்டியுள்ள ஏடுதான் சரியானதாகும் என்று எடுத்துரைத்தது போலவும். 'உலகப் பெருண்மைகள்' என்று இவர் ஓர் ஏடு தீட்டிட அதிலே உள்ள கருத்துரையைக் காணவே நேரு பண்டிதர் ரஷியாவுக்கும் பிரான்சுக்கும் இபபடித் தேசம் தேசமாகச் சுற்றி அலைந்து தேடிக்கொண்டிருப்பது போலவும், நோபல் பரிசு வருஷா வருஷம் எனக்கே தருகிறீர்களே, மற்றவர்களும் பிழைத்துப் போகட்டும் பாவம் என்று இவராகப் பார்த்து நிறுத்திக்கொண்டது போலவும் பேசுகிறாரே, தம்பி, இவர் தீட்டி நாட்டுக்கு நீட்டிய ஏடு எத்தனை?

இன்று வரையில சொத்தையோ சோடையோ இவர் பார்க்க, படிக்க, கண்டிக்க, வெறுக்க, நான், ஏடு தந்ததாகத் தெரிகிறதே தவிர நான் படித்திட இவர் ஒரு ஏடும் தந்ததாகத் தெரியவில்லையே! இந்த மலடியா என் படைப்புகளை நையாண்டி செய்வது? பரிசீலனை நடத்தும் உரிமையே உண்டா என்பது சந்தேகம்!

வடநாட்டவர் பொருளாதாரத் துறையிலே படுத்தும் பாடுகளை விளக்குவது பணத்தோட்டம்—ரோமாபுரி ராணிகள் மட்டும் படித்ததாகக் காட்டிக்கொள்ளும் இந்தக் 'கனம்' இதைப் படித்ததுண்டா? நாடு படித்தது,

தமிழன் 'கலிங்கம்' வென்ற தீர இனத்தவன் என்பதைக் கதை வடிவமாக்கியது கலிங்கராணி—அமைச்சர் கண்சிமிட்டிச் கருத்தழித்த ரோமாபுரி ராணிகளைக் கண்டு, சொக்கிப்போய் நின்றுவிட்டார், கலிங்கராணியைக் காணமுடியவில்லை பாபம்!

பொதுவாழ்க்கைத் துறையிலே உள்ள போலிகளை அம்பலப்படுத்துவது பார்வதி B. A பார்த்ததில்லை அமைச்சர்—மற்றும் பல. ரோமாபுரி ராணிகள்—ஓர் இரவு இந்த இரு ஏடுகள்தான் இவருக்குச் சுவை தந்தனபோலும்.

பேசத்தெரியும், இதுபோன்ற ஏடுகள் தீட்டத் தெரியும் என்று கூறிவிட்டதோடு நிற்கவில்லை அமைச்சர். நான் செய்யவேண்டிய 'வேலை' என்ன என்பது பற்றியும் கூறுகிறார்

தம்பி! தேர்தலில் ஈடுபட நாம் முனைகிறோமல்லவா—பலருக்கு இது பலத்த அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

நமது பலம் பெரிது என்பதற்காக அல்ல, அவர்களுடைய பலக்குறைவு அவ்வளவு அதிகம்; அதனால்.

பதவி ஆசை பிடித்துக்கொண்டது, அதனால்தான் தேர்தலுக்கு வருகிறார்கள் என்று பதவியில் பிசின் போல ஒட்டிக்கொண்டுள்ள இந்த உத்தமர்கள் பேசினர்.

அச்சம் காரணமாகவோ, அல்லற்படவேண்டி வருமே என்ற சங்கடம் காரணமாகவோ, இவர்கள் இவ்விதம் பேசக்கூடும் என்று எண்ணிக்கொண்ட நான், இரண்டோர் திங்களுக்கு முன்பு மதுரையில் பேசினேன், 'ஐயா காங்கிரஸ் நண்பர்களே! ஆயாசப்படாதீர்கள்! எமக்குப் பதவியும் வேண்டாம், இடமும் தேவையில்லை; தேர்தலில் போட்டியிடாதபடி எம்மைத் தடுத்திடும் வாய்ப்புக் கூட நான் தருகிறேன்; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆறு ஆயிரம் கோடி செலவழிக்கப்படும் என்கிறீர்கள்; முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேதான் தென்னாடு ஏமாற்றப்பட்டது இப்போதாவது, முன்னாலே வஞ்சகம் செய்யப்பட்டதற்குப் பரிகாரம் தேடும் முறையிலும் இப்போதைக்கு நீதி வழங்கும் தன்மையிலும், தென்னாட்டுக்கு 2000 கோடி ரூபாய் ஒதுக்குவதாக, நேரு பண்டிதரை வாக்களிக்கச் சொல்லுங்கள்; அந்த வாக்குறுதி கிடைத்தால், நாட்டுக்கு 2000 கோடியும் அதன் பயனாகப் பல நற்பயனும் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியுடனும் நாம் முயற்சி எடுத்ததால், இந்தப் பலன் நாட்டுக்குக் கிடைக்கிறது என்ற திருப்தியுடனும், நாங்கள் தேர்தலில் நிற்பதைக்கூட விட்டுவிடுகிறோம் என்றேன்,

இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி...

இது சில நாட்கள், கவனிப்பாரற்றதாக இருந்து வந்தது.

நாட்டு மக்கள், இதனைக் கவனிக்கும்படியான அரிய தொண்டாற்ற முதலில் கம்யூனிஸ்டு கட்சி பாடுபட்டது; நான் சொன்ன யோசனையை ஆதரிப்பதன் மூலமாக அல்ல; நையாண்டி செய்வதன் மூலமாக

திராவிடநாடு கூட வேண்டாம் போலிருக்கிறது, 2000 கோடி ரூபாய் கொடுத்தால் போதுமாம் — அண்ணாத்துரையின் அரசியலைப் பார்த்தீர்களா — 2000 கோடி கிடைத்துவிட்டால், தேர்தலில்கூட ஈடுபடாமல் விலகிக் கொள்வார்களாம்—இப்படி இருக்கிறது இதுகளோட' அரசியல்—என்று கம்யூனிஸ்டுகள் கேலி பேசினர்.

இது மக்களிடம் நமக்கு இருந்த 'மதிப்பை' உயர்த்தியதை, அவர்கள் அறியவில்லை.

இதுவா அரசியல்? என்று கம்யூனிஸ்டுகள் கேட்டுக் கேலி செய்ததிலிருந்தே, மக்களுக்கு ஒன்று புரிந்தது; மற்ற மற்ற கட்சிகளைப் போல அல்லாமல், முன்னேற்றக் கழகத்தார், நாட்டுக்கு நன்மை கிடைப்பதானால் நாங்கள் தேர்தலைக்கூட மறந்துவிடுகிறோம் என்றல்லவா தெரிவிக்கிறார்கள், தேர்தலில் ஈடுபட்டுத் தமது கட்சிக்குப் புதிய அந்தஸ்து தேடிக் கொள்வது தான் குறிக்கோள் என்று இல்லாமல் நாட்டுக்கு 2000-கோடி ரூபாய் ஒதுக்கினால் தேர்தல் வாய்ப்பும் வேண்டாம் என்றல்லவா கூறுகிறார்கள்—கட்சியைவிட, நாடு பெரிது என்று கருதும் இவர்களல்லவா, உண்மை ஊழியர்கள், என்று மகிழ்ந்தனர்.

இப்போது கம்யூனிஸ்டுகள் செய்த 'தொண்டு' மேலும் திருத்தமாக, சுப்ரமணியனார் மூலம், செய்யப்பட்டிருக்கிறது.

இவர், கம்யூனிஸ்டுகளை விட பலபடி தாவிச் சென்று 'ஆக்ரோஷத்துடன்' பேசியிருக்கிறார் என்பது எல்லா ஏடுகளிலும தெரிகிறது.

'அண்ணாத்துரை 2000 கோடி ரூபாய் தரப்பட வேண்டும் என்று கூறுகிறார்; சரி; 2000 கோடிக்கு, நல்ல திட்டம் தீட்டட்டும், அதை ஒரு அயல்நாட்டு நிபுணர் ஒப்புக் கொள்வாரானால் நான் என் மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்துவிடுகிறேன்—என்று பேசியிருக்கிறார்.

படித்ததும் தம்பி, எனக்கு முதலில் பரிதாபமாக இருந்தது.

திட்டம் தீட்டினதும், முதலில் களப்பலிபோல, இவருக்குப் பதவி போய்விடுமாமே, அந்தோ, பரிதாபமே, எவ்வளவு சிரமப்பட்டுப் பெற்றார், எத்துணை இராஜ தந்திரத்தைக் கொண்டு, ஆபத்தினின்றும் தப்பிப் பிழைத்தார்; கடைசியில் நம்மாலா இவருடைய பதவிக்கு 'முடிவு' ஏற்பட வேண்டும் என்றெல்லாம் எண்ணத் தோன்றிற்று.

நான் 2000 கோடி தென்னாட்டுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டது, இவருடைய 'பதவி'க்கு முடிவு காண அல்ல! அது சாதாரணமாகவே, காலாவதி ஆகிவிடக்கூடியது! இவர் ஏன் பதவியை, இதற்காக இழக்கவேண்டும்! தாராளமாக இருக்கட்டும், அதிலும், எப்போது இவர் திட்டம் தீட்டச் சொல்லி என்னை அறைகூவி அழைக்கிறாரோ, இவரே தானே இருந்து அதை நிறைவேற்றித் தர வேண்டும்! ஏன் ஓடிவிடப் பார்க்கிறார்!

ஆனால் உண்மையில் அப்படி ஓடிவிடக் கூடியவரா? செச்சே! அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்! ஆச்சாரியார் ஆட்சியின்போது, குலக் கல்வித் திட்டத்தை முழு மூச்சாக ஆதரித்தவர், பிறகு அது காமராஜர் ஆட்சியின்போது, குழி தோண்டிப் புதைக்கப்பட்டது கண்டும், கண்ணீர் வடித்துக்கொண்டு, நான் பெற்ற செல்வம் மடிந்ததே என்று மாரடித்துக்கொண்டு 'மந்திரி' வேலையை இராஜினாமாச் செய்வார் என்று பலரும் கூறினர், அவரா இதற்கெல்லாம் இடம் கொடுப்பவர்! ஒட்டிக்கொண்டார்! அவர் புகுத்திய கல்வித் திட்டத்தை ஓட்டினர்–இவர் மட்டும், ஓட்டினவருடன் ஒட்டிக்கொண்டார்; ஓடிவிடவில்லை பிசின் அவ்வளவு பலம்!!

"தேவிகுளம் பீர்மேடு போனவிட்டால்......! என்று முழக்கமிட்டார்; நேரு பண்டிதர் 'மைய மைய' அரைத்தெடுத்த கரியை முகத்தில் பூசினார்; சே! இதுவும் ஒரு பிழைப்பா? சட்டசபையிலும் மக்களிடமும் மார்தட்டித் தட்டிப் பேசினோம். நமது வார்த்தைக்கு மதிப்பளிக்கவில்லையே டில்லி தர்பார், இந்த அவமானத்தைத் துடைத்துக் கொள்ளவாவது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வோம் என்று 'ரோஷம்' காட்டினாரா? அவரா!! காட்டியிருந்தால் இன்று கரூரிலும் மதுரையிலும் பிற இடங்களிலும் 'பிரமுகர்கள்' தரும் வரவேற்பு கிடைத்திருக்காதே!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 கோடி தரவேண்டுமென்று. டில்லி சென்று இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி'க் கேட்டார். நேரு பண்டிதரோ, 'ஆடினார் ஆடி சாடினார் ஓடோட! "என்ன செய்தார், வேண்டாமய்யா இந்தப் பதவி என்று கூறி இராஜினாமாச் செய்தாரா? செய்வாரா? சுவை சாமான்யமா?

எனவே, திட்டம் தந்தால் இராஜினாமாச் செய்கிறேன் என்று பேசுவது, உண்மையல்ல; விளையாடுகிறார்!

திட்டம் தீட்ட எனக்குத் தெரியுமா, தெரியாதா, என்பதா, இன்று அரசியல் பிரச்சினை?

இதிலேயும், பார் தம்பி, அடிமைப் புத்தியை.

நம்மைப் போய் நையாண்டி செய்கிறார், அன்னிய மோகம் என்று; இவர் இலட்சணத்தைக் கவனித்தாயா? நான் திட்டம் தீட்ட வேண்டுமாம், அதை ஒரு அயல் நாட்டு நிபுணர் ஒப்புக்கொள்ள வேண்டுமாம்! அயல் நாட்டு நிபுணர்!! ஏன் இந்த அடிமை மனப்பான்மை?

சரி, இனிப் பிரச்சினையைப் பார்த்திடுவோம்.

நான், அயல்நாட்டு நிபுணர் கண்டு மெச்சி ஏற்றுக் கொள்ளத்தக்க திட்டம் ஒன்று என்னிடம் இருக்கிறது, அதை நிறைவேற்ற 2000 கோடி தருக! என்று கேட்கவில்லை.

நான் கேட்டது. நீங்கள் தீட்டியுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 2000 கோடி ரூபாய் தென்னகத்துக்கு ஒதுக்குங்கள், என்றுதான் கேட்டேன் —கேட்கிறேன் — ஒவ்வொரு வாக்காளரிடமும் கூறி இதைக் கேட்கச் சொல்லப் போகிறேன்.

இன்னமும் இருக்கிறார்-ஏது பதில் சொல்கிறார்!

இப்போது, இந்த அமைச்சர் கொலுவிருக்கும் சென்னை ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 170 கோடி!

இவர் கேட்டது 400 கோடி!
கிடைத்தது 170!

இந்த வெட்கக் கேட்டைப் போக்கிக் கொள்ள இவர் முனையாமலிருக்கலாம்; பதவி காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே வஞ்சிக்கப்பட்ட தென்னகம், இப்போது 2000 கோடி கேட்க உரிமை பெற்றிருக்கிறது.

நான், 2000 கோடி என்று கேட்டபோது, என்னிலும் மிக மிகப் பெரிய தலைவர்கள் சார்பில் கேட்கிறேன். அமைச்சர் ஆச்சரியத்தால் மூர்ச்சையாகாமலிருக்கவேண்டும் நான் அவர் சார்பிலும்தான் கேட்கிறேன்!

தென்னாடு தொழில் துறையில் பின்னடைந்திருக்கிறது என்று இவரே கோவையில் இரண்டோர் திங்களுக்கு முன்பு கதறவில்லையா!

சிந்தாமணி தேஷ்முக், இது உண்மைதான் என்று ஒப்புக் கொள்ளவில்லையா?

தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பது பற்றி அனுமந்தய்யா ஆயாசப்படவில்லையா? ...டி விசுவநாதம் தேம்பவில்லையா? வல்லத்தரசு க...டிச்சவில்லையா? புன்னூஸ் புலம்பவில்லையா? அன்னம்மாஸ்...ளிஸ் கேட்கவில்லையா? இங்குள்ள தேசிய ஏடுகளேகூட அவ்வப்போது கண்டிக்கவில்லையா? இவ்வளவு மலையெனக் குவிந்திருக்கும் மனக்குமுறலின் பேரால், கேட்டேன்; என் மேதா விலாசத்தைக் காட்டிக்கொள்ள அல்ல.

திட்டம் தீட்டித் தர நான் மட்டும்தான் என்ற 'அகம்பாவம் புகத்தக்க' விதமாக நான் பயிற்சி பெற்றவனுமல்ல'. பதவி எனக்குத் தலைக்கனம் தரவில்லை.

திட்டம் தீட்ட நாட்டிலே உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் உட்காரலாம்—எனக்கும் இடமளித்தால் இருக்கிறேன்—தொழில் துறை நிபுணர்கள் இருக்கிறார்கள். நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். விஞ்ஞான வித்தகர்கள் உளர், பேராசிரியர்களின் அணிவகுப்பே இருக்கிறது. பாரெங்கும் உள்ள பல்வேறு முறைகளைப் பாங்குடன் அறிந்த பத்திரிகை ஆசிரியர்கள் பலர் உளர். அனைவரும் அமரலாம். அற்புதமான திட்டம் தீட்டலாம்—எந்த அயல்நாட்டு நிபுணரும் மெச்சத்தக்க வகையில்.

இது முறை—இது நெறி.

திட்டம் தீட்டு பார்ப்போம் என்று எனக்கு அறைகூவல் விடுவதா முறை? ஒருவகையில் இதனை எனக்கு அளிக்கப்படும் பெருமை என்றுகூட நான் எடுத்துக் கொள்ளலாம்—ஆனால் அகம்பாவம் என்னைப் பிடித்துக் கொண்டில்லை—எனவே, அருமையான திட்டம் தீட்டத்தக்க அறிஞர் பெருமக்கள் அனேகர் உள்ளனர் என்பதை அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன்.

அதெல்லாம் முடியாது, உன்னால் முடியுமா என்றே அமைச்சர் பிடிவாதமாகக் கேட்பதானால் அந்த அறிஞர் பெருமக்களின் உதவியை நான் கேட்டுப் பெற்று, திட்டம் தருகிறேன் என்று உறுதி அளிக்கிறேன்.

அறைகூவலை நான் ஏற்றுக்கொள்கிறேன் — ஆனால் அந்த 2000 கோடி ஒதுக்கும் அதிகாரம் இருக்கிறதே, அது என்னிடம் வீரதீரமாகப் பேசிடும் இந்த வித்தகரிடம் இல்லையே, என்ன செய்வது?

ஐந்தாண்டுத் திட்டம் தீட்டவும், தொகை ஒதுக்கவும் அதிகாரம் படைத்தவர் நேரு! இவர் கையேந்தி நின்று, கிடந்தால் மகிழ்ந்து, இல்லையென்றால் கண் கசக்கிக்கொண்டு வரும் நிலையில் வைக்கப்பட்டிருக்கும், பொம்மைதானே!

இவர் எனக்கு அறைகூவல் விடுப்பதும் நான் அதனை ஏற்றுக்கொள்வதும் என்ன பலன் அளிக்கும்?

நேரு பண்டிதர், இவ்விதம் கேட்பாரானால், நான் அழைக்கக்கூடத் தேவையில்லை. தென்னாட்டின் அறிஞர் பெருமக்களேகூடி அருமையான திட்டம் தீட்டுவர். அவர்களில் பலர் 'தனிநாடு' என்று பிரிவது தேவையில்லை என்று எண்ணுபவர்களாக இருக்கலாம், ஆனால் வடநாடு மிக மிக அதிகமாகத் தொழில் துறையில் முன்னேறிவிட்டது—தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து வேதனை அடைந்தவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆகவே, என்மீது சுடுசொல் வீசியோ கேலி பேசியோ, அமைச்சர் தமக்கு ஏற்பட்டுள்ள எரிச்சலைக் காட்டிக்கொள்ளலாமே தவிர, நாட்டு மக்கள் உள்ளத்திலே கொதித்துக் குழம்பிக்கொண்டுள்ள அதிருப்தியை அடக்கிவிட முடியாது.

இந்தச் சூழ்நிலையில், ஆவேசமாகப் பேசுகிறார் என்று நம்பி யாரார் பாவம் எப்படி எப்படியோ குவித்த பணத்தை இலட்ச இலட்சமாக, இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்று, இழந்துவிட்டு ஏங்கப்போகிறார்களோ!

அப்படிப்பட்ட பணப்பெட்டிகளைத் தேடிச்செல்லும் வேலை இது; எனவேதான் அமைச்சர் ஆர்ப்பரிக்கிறார்; அறைகூவல் விடுகிறார்!

மதுரையில் நான் பேசின போது இவ்வளவு எளிதில் முளைவிடும் என்று எண்ணவில்லை; இதோ அமைச்சர் ஆர்ப்பரிக்கவேண்டிய நிலைமை வேகமாக வளர்ந்துவிட்டது,

> முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மோசம் போய்விட்டோம்; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நாம் சரியான, நியாயம் பெறவேண்டும்.
>
> தி. மு. க. 2000 கோடி ரூபாய் தென்னாட்டுக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்கிறது.
>
> நாட்டு மக்களே! இதற்கு உங்கள் ஆதரவு தாருங்கள்.

என்று இல்லந்தோறும் எடுத்துச் சொல்ல நாள் தவறாமல் பணியாற்று; பார் பதைக்கிறார், கதைக்கிறார், கனம். பலன் அளிக்கிறது. நமது பிரசாரம் என்பது தெளிவாகிறது. எனவே புதிய உற்சாகத்துடன் பணிபுரியலாம், தம்பி அமைச்சரின் ஆவேசப் பேச்சு அதற்கே பயன்படவேண்டும்.

அண்ணன்,



(23—9—56 திராவிட நாடு இதழில்)

சமுதாயச் சிந்தனைகள் (1)

அன்புள்ள நண்பா!

பால், பழம், பாகு முதலானவைகளை ஒருவரிடம் தந்து உண்ணச் சொன்னால் மறுப்பாரா? பாதாம் கீர், பழரசம், பால்பாயாசம் போன்றவைகளைக்கூட வேண்டாம் என்பார் உண்டா? திகட்டத் திகட்டத் தின்றுவிட்டு, பலமான ஏப்பம் விட்ட பின்னரும் கூட ஓரிரு நாழிகை ஒழிந்ததென்றால், அப்போது மறுபடியும் அதுபோன்ற பான வகைகளைத் தந்தால், வயிற்றுக்குள் வழியனுப்ப முடியாவிட்டாலும் முயற்சித்துப் பார்க்க இதயம் ஏங்காதா? என்றாலும், கண்விழித்த காலம் முதல் கண்துஞ்சும் காலம் வரையில் இதனையே உணவுப் பொருளாகக் கொள்ள வேண்டும் என்ற நிலையில் ஒருவன் இருந்தால், பாலாக விருந்தாலும், பழரசமானாலும், பாதாம்கீரானாலும் பால் பாயசமானாலும் அவனுக்கு அலுப்புத் தட்டத்தானே செய்யும்?

கண்விழித்தவுடனேயே காலைப்பதிப்பு ஏடுகளைத் தொட்டால், கைலயங்கிரியில் மோதிய விமானத்தில் இருந்தவர்கள் கால்நூறு பேர், காலன்வாய்ப் பட்டார்கள் என்ற செய்தியையோ, தடம் புரண்டு விழுந்த இரயிலிலிருந்து தாண்டிக் குதித்தோர்போக மரணத்திடமிருந்து தப்பமுடியாது போனவர்கள் இருநூறு பேர் என்றோ, லாரியில் அடிபட்டு, பஸ்சில் மோதி, படுகாயமடைந்து ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியில் உயிர் நீத்தோர் ஒன்பதுபேர் என்றோ கொலைச் செய்திகளைப் படித்துப் படித்து பஞ்சுபோன்ற நெஞ்சங்கள்கூட பாறையாகிவிடுகின்ற நிலைமை ஒருபுறம் நாளும் நாளும் வளர்ந்துகொண்டே வருகிறது.

மரணம் என்பது இதயத்தை உலுக்கக்கூடிய செய்திதான் என்றாலும், பலரது மரணத்தைக் கேட்டாலும், பல நாட்கள் தொடர்ந்து கேட்டாலும்கூட, இதயம் நெகிழாத நிலை ஏற்பட்டுவிட்டிருக்கிறது நாட்டில். ஆந்திர வெள்ளக்கொடுமையால் எண்ணூறு பேர் சாவுலகடைந்தனர் என்றசெய்திகூட இதயத்தை வருடிவிடமுடியாத அளவுக்கு நித்தம் நித்தம் கொலைச் செய்திகளையோ, மரணச் செய்திகளையோ பார்த்துப் பார்த்து, கேட்டுக் கேட்டு, படித்துப் படித்து மனம் பாறையாக உறையத் தொடங்கி இருப்பதுதான் காரணங்களோ என்னவோ!

இதுபோலவே நண்பா, செய்தி இதழ்கள் தரும் பட்டினிச் சாவு செய்திகளோ, குடும்பத்தோடு தற்கொலைச் செய்திகளோகூட நெஞ்சத்தை நீவி விடுவதில்லை.

வியட்நாம் போரில் அமெரிக்கா பயன்படுத்திய நச்சுவாயுக் குண்டுக்கு 4000 பேர் பலியானார்கள் என்றோ, மாணவர் கிளர்ச்சியால் நடைபெற நேர்ந்த துப்பாக்கிச் சூட்டுக்குத் தொன்னூறு பேர் பலியென்றோ, முதலாளி—தொழிலாளி மோதலில் 30 பேருக்குக் காயம் என்றோ வருகின்ற செய்திகளும் இன்று பரபரப்புக்குரிய இடம்பெற முடியாமற் போய்விட்டிருக்கிறது.

மற்றும் ஜாதி இந்துக்கள் சிலர், அரிஜனச் சிறுவனை நடுத்தெருவில் நடந்து வந்த குற்றத்துக்காக மரத்தில் கட்டிவைத்து, மண்ணெண்ணை ஊற்றிக் கொளுத்தினார்கள் என்பதும், தேனீர்க் கடையில் ஒதுக்குப் புறமாக அமர்ந்து தேனீர் பருகக்கூறியதற்காக, அரிசனக் கூட்டம் ஜாதி இந்துவின் தேனீர்க் கடையையே சூறையாடித் தீயிட்டுக் கொளுத்திய செய்தியையேகூட படித்துவிட்டு அதைப்பற்றி எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு மனம் உறைந்துபோய்விட்டிருக்கிறது.

பாலும், பாகும் பழரசபானங்களும் மட்டுமே திகட்டும் என்பதில்லை. சோகச் செய்திகளாயிருந்தாலும் சுகப்பயணச் செய்தியாயிருந்தாலும், தேன்நிலவுச் செய்தியாயினும்கூட திகட்டிப்போகிற அளவுக்கு அன்றாடச் செய்திகளும் நடைமுறைகளும் விளைந்து கொண்டிருக்கின்றன!

சிறுகதைகளைப் படிக்கத் தொடங்கினால் காதலன் காதலி கள்ளச் சந்திப்பு, கண்ணீர், கடலில் மூழ்கி சாவு என்றோ, காதலர்க்கிடையே புகுந்த வில்லனின் புல்லரிக்கும் சம்பவச் சேர்க்கைகள் பற்றிய வருணனை ரசம்பற்றியோகூட ஒரேயொரு வட்டத்துக்குள்ளேயிருந்து வளைய வளைய வந்து கொண்டிருக்கும் கதைப் பின்னணிகள்! படிக்கக்கூட அலுத்துப் போகாதா?

திரையுலகுக்குப்போனால் மட்டும் என்ன? சிறுகதைகளையோ, பெருங்கதைகளையோ காட்சி வடிவாக்கிக் காட்டுவதிலே ஒரே மாதிரியான முறை! நயம்! தயாரிப்பு!! கதை, வசனம், பாடல்கள்!!!

தொடர்ச்சியான இதுபோன்ற ஒரேவிதமான சம்பவக் கோவைகளால் மனம் ஒருவித சலனமற்ற தன்மைக்கு ஆளாகி விட்டிருக்கிறது மக்களுக்கு.

அரசியல் நிகழ்ச்சிகள் மட்டும் இந்த தன்மையிலிருந்து மாறிவிடும் என்று எப்படி நம்பமுடியும்? காங்கிரசுக் கட்சியின் வரட்டுக் கூச்சல்களிலிருந்து, காமராஜருக்கு ஏற்பட்ட மானபங்க நிகழ்ச்சி வரையிலேகூட ஒரேவிதமான காட்சி ஜோடனைகள்!

கீழ்க்கத்தைதான் எடுத்துக்கொள்ளலாமே! காங்கிரசுக் கட்சியின் ஜனநாயக விரோதப்போக்கை எடுத்துக் காட்டுவதும், மக்கள் தம் அறியாமைக் கருத்துக்களைத் தெளிவுப்படுத்திக் காட்டுவதும் நரிக் கூட்டத்தாரின் திருவுருவப்பட வீதி உலா விழாக்கள் பற்றியும், வரட்சியின் கொடுமை பற்றியும், மக்களின் கடமை பற்றியும் நாளும் நாளும் எடுத்துக்காட்டுகிற ஒரே விதமான நடைமுறை!!

சில சந்தர்ப்பங்களில் அன்றாடம் இந்த நடைமுறைகள் தேவைப்படத்தான் செய்கின்றன. பன்னிப் பன்னிக் கூறிக்கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் தடுக்கப்பட்டுவிட முடியாத அரசியல் போக்குகளின் விளைவுகளில் பிறப்பெடுப்பனவாகும். பிறந்துவிட்டவை, வளரவேண்டியவையல்லவா! வளர்க்கப்படவேண்டியிருக்கிறது. அதனால் மறுபடியும் மறுபடியும் ஒரேவிதமான செய்திகள்! சம்பவங்கள்!

எனினும், நண்பா, ஒரேவிதமான நடைமுறைகளுக்கு இடையே ஊடாடிக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை உனக்கும் எனக்கும் பலவந்தமாகத் திணிக்கப்பட்டு விட்டிருக்கிறது. திகட்டிப் போகின்ற அளவுக்குத் திணிக்கப்பட்டிருக்கிறது.

தேன்பாகு போன்ற நிகழ்வுகளானாலும்கூட திகட்டித்தான் போகிறது. ஆயினும் அந்தத் திகட்டலுக்கு இந்தக் கிழமை மாற்றுத் தேடிப்பார்க்கலாமே என்ற ஓர் எண்ணம்!

எண்ணங்கள், அவற்றின் கடமைகளைத்தானாகவே நிறைவேற்றி வைத்துவிடுகின்றன. செயல் வடிவம் பெருவது அல்லவா பெருஞ்சுமையாய் இருக்கிறது.

விண்வெளியில் நிலா மண்டலத்தின் அருகே ஒன்பதரை மைல் தூரத்திலிருந்து மனிதன் இறங்கி ''குடித்தனம்'' செய்யத்தக்க இடம் நிலாவில் இதுதான் என்று கண்டறிந்துகொண்டுவிட்டு பூமிக்குத் திரும்பியிருக்கிறார்கள் இந்தக்கிழமை. ஸ்டாபோர்டு, செர்னன், யங்க் ஆகிய மூவரும் இந்தப் பெருஞ்சாதனையைச் சாதித்துவிட்டு மீண்டிருக்கிறார்கள்.

எவரோ சிலரது எண்ணங்கள், இத்தகைய அசாத்தியமான சாதனைகளைச்செய்து காட்டுகின்றன— காரணம், எண்ணங்கள் திண்மையாக–வலுவாக செயல்படுவதாகத்தானே இருக்கவேண்டும்!

ஏதேனும் ஒன்றை எடுத்துக்காட்டவேண்டும் என்று மட்டும் எண்ணம் பிறந்துவிடுகிறது ஆனால் எடுத்துக்காட்ட எண்ணுவதனை செயல்படுத்த முனையும் போதல்லவா அதன் அருமை தெரிகிறது! நிலாவுலகுபோய் வந்தவர்களுக்கல்லவா அதன் பெருமை புரியும்!

திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்துகொண்டிருக்கிறதென்றால், காங்கிரசின் இரும்புப் பிடியிலே வலுவாகப் பிணைக்கப்பட்டிருந்த ஆட்சியுரிமையினை நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால் அதுமட்டும் சாதாரண செயலா? பொதுத்தன்மை கொண்ட சாதனையா?

இதற்கான பின்னணியை இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்ப்பது பயன் தரும் நண்பா! அந்தப் பயனும், விளைவும் திகட்டலிலிருந்து கொஞ்சம் விடுபட வாய்ப்புண்டாக்கும்!

மனித சமுதாயம், சமுதாயமாக அமைக்கப்பட்ட நாள்முதல் அதுவாழத்தொடங்கியபோதுவரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு ஆட்படுத்தப்பட்ட நாள் முதல் எத்தனை எத்தனை மாறுபாட்டுக்கு ஆளாக்கப்பட்டு வந்திருக்கிறது!

மனிதகுலம் தோன்றிய காலத்து இருந்த நிலைமை இன்றில்லை. காரணம் புதிய புதிய சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் அது தன்னை ஆட்படுத்திக்கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது.

மதத்தின் பேராலும் மார்க்கத்தின் பேராலும் சிலபல மூடப்பழக்க வழக்கங்கள் புகுத்தபட்டன. என்றாலும் மாற்றத்தை அடைந்தே வந்திருக்கிறது.

இந்த மாற்றத்தைச் சமுதாய சீர்திருத்தம் என்று மட்டுமே கொள்வோமானால், மனித ஜாதி, இன்னும் பல சீர்திருத்தங்களைக் கொண்டாக வேண்டும் என்று கூற வேண்டியதாகிவிடும்.

மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கு மண்டையை வருடிக்கொண்டோர் தொகை கணக்குக்கு உட்பட்டதாகவா இருக்கும்? எனினும் அவன் பூரணத்துவம் வாய்ந்த மனிதனாக இன்று வாழ்கிறானா? வாழ முடிகிறதா? வாழ முடிந்த சமூக அமைப்போ, பொருளாதார அமைப்போ அமைந்துவிட்டிருக்கிறதா?

'இல்லை' என்று தலையைக் குனிந்துகொண்ட தன்மையில் வெட்கம் வேலாய்க் குத்த அல்லவா பதில் சொல்லவேண்டியிருக்கிறது!

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு விழாவில் கலந்துகொண்டு பேசும்போது குறிப்பிட்டார்கள்:

> ''கூர்முனைப் பேனாகொண்டு அரண்மனைகளை, அஞ்ஞானிகளின் இருப்பிடங்களை, பழைமையின் கோட்டைகளைத் தாக்கிய வீரன் வால்டேர் வெற்றிபெற்ற பின்னர்தான் புரட்சித் தேவன் லெனின் போராடி வெற்றி பெற முடிந்தது. சமுதாயத் துறையில் வால்டேர் ஒரு புரட்சியை உண்டாக்கிய பின்னர்தான் மக்கள் லெனினை வரவேற்றார்கள்முதலில்சாக்ரடீஸ்,பின்னர் வால்டேர்,பின் லெனின். இந்த மூன்று சம்பவங்களும் வெவ்வேறு காலத்தில் நடைபெற்றன. இவ்வளவும் சமுதாயப் புரட்சிக்காகவே நடைபெற்றன. ஆனால் நம் நாட்டில் இம் மூன்றையும் நம் இயக்கம் ஒருங்கிணைத்து நடத்தவேண்டியிருக்கிறது. எனவேதான் நம் புரட்சி மூன்று புரட்சிகளின் ஒரு கூட்டுச் சக்தி ஆயிற்று.''

பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று எந்தக் கருத்தைப் பிரதிபலித்துக் காட்டினார்களோ அந்தக் கருத்தைத்தான் இன்றும் எடுத்துக் காட்டவேண்டிய நிலைமை இருக்கிறது.

ஒரு மனிதனை, அவன் மனிதனாகத் தலைநிமிர்ந்து வாழத்தக்க செயல்களைச் செய்தாகும்போது இந்த மூன்று கட்டங்களையும் ஒருங்கே இணைத்தாக வேண்டியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், பிறப்பெடுப்பதற்கு முன்னால், திராவிடர் கழகம் சமுதாயத்தில் ஒரு அருஞ்சாதனையைச் செய்திருக்கிறது என்று கூறவேண்டிய நிலை யேற்படுமானால் அது, சமுதாயம் பற்றிய சிந்தனையை மனிதனுக்கு ஊட்டியது என்றே கூறவேண்டும்

சமுதாயம் பற்றிய சிந்தனையை அது ஊட்டி வளர்க்கத் தொடங்கியதன் எதிரொலிதான் திராவிட முன்னேற்றக் கழகமும், இன்றைய அதன் ஆட்சி அமைப்பும் என்று பலத்த வாதத்துக்குப் பின் உணர்ந்துகொள்ள முடியும்.

சமுதாயப் புரட்சியின் அறுவடைதான் கழக ஆட்சி என்கிறபோது, அந்த ஆட்சி மட்டும் அனைத்து சாதனைகளையும் சாதித்துவிட முடிந்த நிலையிலிருக்கிறதா? எண்ணிப் பார்க்கவேண்டிய கட்டம் ஏற்பட்டிருக்கிறது இன்று.

இன்றைய இந்த சிந்தனை, மாபெரும் வடிவம் எடுத்தாக வேண்டும், அந்த வடிவம் நண்பா, பேரறிஞர் அண்ணா அவர்கள் சமுதாயக் கருத்துக்களை எடுத்துக் காட்டியதைப் போன்ற ஆயிரமாயிரம் கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் காட்டத்தக்க ஆயிரமாயிரம் சிந்தனையாளர்களை உருவாக்க வேண்டும்.

சாக்ரடீஸ் காலத்துச் சமுதாயம் ஒருவிதம்; வால்டேர் காலத்து சமூக அமைப்பு ஒரு மாதிரி; லெனின் காலத்து நினைவுகள் தனி; இவர்களை யொட்டிச் சென்ற குருநானக், சங்கராச்சாரியார் போன்ற மதவாதிகள் போதித்த சீர்திருத்தங்கள் ஒரு ரகமானவை.

இன்னும் கொஞ்சம் அருகே வந்து பார்த்தால் பெரியார் ஈ. வே. ரா. அவர்களது சமுதாயச் சீர்திருத்தமும். பேரறிஞர் அண்ணா அவர்களது சீர்திருத்த முறைமைகளும் இன்னும் இன்னும் இன்னும் மாறுபட்டவை!

என்றாலும் எண்ணற்கரிய பேரறிவாளர்களால் எடுத்துக் காட்டப்பட்ட சமூக அமைப்புக்கள்—சமூக கட்டுதிட்டங்கள், அவைகளுக்குள்ளே வளைய வளைய வந்து கொண்டிருக்கும் மனிதன் இன்னமும் முழுமை பெற்ற மனிதனாக வாழாமலேயே—வாழ முடியாமலேயே இருக்கிறானே ஏன்?

ஓட்டை எங்கே விருந்திருக்கிறது? கடந்த காலத்து அறிவுப்பணிகள் எதன் வழியாக ஒழுகிப்போயிற்று?

எவ்வளவோ பேசிப்பேசி, அலுத்துப்போன பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், ஏன் மனிதனை காட்டுமிராண்டி என்று இன்று அழைக்கத் தலைப் பட்டிருக்கிறார்?

தீண்டாமை இருந்துதான் தீரவேண்டும்; அதனைக் கட்டிக்காப்பது என் பிறப்புரிமை என்று எதனாலே இந்த இருபதாம் நூற்றாண்டு இறுதியில் சொல்ல முடிகிறது ஒரு பூரியாரால்?

இவையனைத்துக்கும் வெறும் சமுதாயக் கோட்பாடுகள் மட்டுமே காரணங்களா? அன்றி, பொருளாதார மேடுபள்ளங்கள்கூட பங்குபெறுகின்றனவா? இவைகளுக்கும் அரசியல் சிந்தாந்தங்களுக்கும் தொடர்புண்டா?

அடுக்கிக்கொண்டே போகலாம், வினாவுக் குரியனவற்றை. ஒரு பண்டத்தின் விலையேற்றத்துக்கு எப்படி ஊதிய உயர்வு—விலையேற்றம்; பற்றாக்குறை—விலையேற்றம்—தட்டுப்பாடு விலையேற்றம்—விலையேற்றம்—ஊதிய உயர்வு என்பது சங்கிலிக் கோர்வைபோல ஒன்றுக்கொன்று காரணங்களாய் அமைந்துவிட்டிருக்கின்றனவோ, அதைப் போலவே, இந்த மனித குல வாழ்வும், சமுதாய-அரசியல்—பொருளாதார விவகாரங்களோடு இன்று பிணைக்கப்பட்டு ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க முடியாத அளவுக்கு இறுக்கிக் கட்டப்பட்டிருக்கின்றன.

சமுதாய கட்டு திட்டங்களால் மட்டுமே மனித குலமும், முன்னேற்றமும் தடைப்படுகின்றது என்று கூறிவிட முடியாது. சில கட்டு திட்டங்களால் உயர்வடையவும்கூட முடியும். அந்த உயர்வினைப் பொருளாதார மேடு பள்ளம் தடுத்து நிறுத்திவிடவும் கூடும், இவைகளுக்கப்பாலிருந்தபடி, அரசியல் காரணங்களால் கூட தடுக்கப்படுவதும் உண்டு.

அதனால்தான் நண்பா, அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, சாக்ரடீஸ், வால்டேர், லெனின்போன்றாரது புரட்சி முறைகள் அனைத்தும் இணைந்த ஒரு இயக்கமாக நாம் இயங்கித்தீரவேண்டிய நிலைமை இன்னமும் மாறுபடாமலேயே இருக்கிறது.

கருங்காக்கைக்கு வெள்ளை நிறம் அடித்து விட்டு விடுவதனாலேயே, அது வெள்ளைக் காகம் என்றாகி விடுமா? மேல் பூச்சுக்களால் மட்டிலுமே எதிர்பார்க்கின்ற அனைத்து சீர்திருத்தங்களுமே ஏற்படுத்திவிட முடியுமா?

நூறு ரூபாய் ஊதியம் பெறுகின்ற ஒருவனுக்கு முன்னூறு ரூபாய் கிடைக்கும் படியான நிலைமையினை மட்டும் ஏற்படுத்தி விடுவதாலே, அவன் பூரணத்துவம் பெற்ற மனிதனாக வாழ முடிந்து விடுமா?

குச்சு வீட்டிலே வாழ்பவனை அழைத்து வந்து மச்சு வீட்டிலே குடியேற்றி விடுவதாலேயே மேடும் பள்ளமும் தூர்ந்துபோய் விட்டதாக ஒப்புக்கொண்டு விட முடியுமா?

முடியாது நண்பா, முடியாது. காலத்தை முழுமைப் படுத்துவதென்பது அத்தனை எளிய ஒன்றல்ல! ஒரு வரியிலே எடுத்துக்காட்ட முடிந்ததுமல்ல! எந்தவொன்றுக்கும் ஒரு காரணத்தைக் கற்பித்துவிட முடியும். எடுத்துக்காட்டப்படும் காரணம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் இருக்கக்கூடும். என்றாலும் அந்தக் காரணங்கள் அனைத்துக்கும் மனிதனை முழுமைப் படுத்திவிடக்கூடிய ஆற்றலும் வலிமையுமிருக்கிறதா?

ஒருவிதமான அரசியல் நடைமுறையினைப்பற்றி விமர்சிக்கத் தொடங்க முனையும்போதே கூடவே அத்துடன் பொருளாதாரச் சிக்கலும் ஒருங்கிணைந்து இருப்பதுவும் எடுத்துக் காட்டப்படக்கூடும். அரசியலும், பொருளாதாரமும் யார்மீது ஏற்றிவைத்துக் காட்டப்படுகிறது? மனிதன் மீதல்லவா? அந்த மனிதன் தான் சமூக அமைப்பல்லவா?

அரசியலிலே மட்டும் பெற்றுவிடுகின்ற வெற்றிகள் பொருளாதார வெற்றியினைத் தந்துவிடுவதில்லை. பொருளாதார மேம்பாடுகள் அரசியல் விழிப்புணர்வுகளை மாற்றியமைத்துவிடுவதில்லை.

ஆனால் நண்பா அரசியல் என்பதே சமூகக் கட்டுக்கான சில சிந்தாந்தங்கள் என்று பொருளாகுமில்லையா? அந்த சமூகத்தின் அடித்தளத்தின் மேலே கட்டப்படும் கோபுரம்தானே அரசியல் என்பது!

இவை ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு விடுகிறபோது, எதிலிருந்து எதனைப் பிரிக்க முடியும்? இரண்டையும் பிரித்துவிட முனையும்போது, இரண்டினையும் இணைத்துக் கொண்டிருக்கும், இணைப்புப் பாலமாக இயங்கிக் கொண்டிருக்கும் பொருளாதாரம் என்ன பேசும்?

தீவிரமான ஆழமான சில சிந்தனைகளின் அடிப்படையிலே ஆராய்ந்து பார்க்க வேண்டியவை இவை, ஒரு நாளில் ஒரு கிழமையில் முடிவு கண்டுவிட முடியாது.

சமூகச் சிந்தனை நம்மை பின்னோக்கி அழைத்துச் செல்கிறது! அதன் வழியே கொஞ்சம் சென்று வருவோம். அது எங்கே அழைத்துச் செல்கிறது என்பதனை அடுத்த கிழமை ஆராய்வோம்!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்கிட்டதுக்கா இந்தக்கோபம்..'' —கோமதி குறுக்கிட்டுத் தடுத்தாள்.

''எஜமான் ஊருக்குப் போராரு. போயி பஸ் ஏற்றிட்டு வரணும்.''

''தோட்டத்தில செய்யுற வேலை போதாதுன்னு உங்க எஜமானை பஸ் ஏத்த வேற போவணுமா?''

'ஏம்மா! போரப்ப சும்மா இருக்க மாட்டே. தோட்டக்காரன்னு தோட்டத்து வேலைக்கு மட்டுந் தானு...! அப்படி கராரு அங்கே போயி பேசினு உடனே வீட்டுக்குத் தான் அனுப்புவாங்க எல்லா வேலை களையும் தலைமேல போட்டுகிட்டுச் செய்தாக்கூட சம்பளம் சரியா வர மாட்டேண்ணுது.''

''என்னவோப்பா. இந்த குழந்திங்க அலமு மேலியே நினைப்பா யிருக்குங்க. நீயாவது அதுங்க தூங்கற நேரத்துக்கு இருந்து ஏக்கத்தைத் தணிப்பேன்னு நினைச்சா... வேலை வேலைன்னு ஓடர''—பனித்தி நின்ற கண்ணீரைத் துடைத்தபடியே, கோமதி ரங்குவை அனுப்பினாள்.

ரங்குவுக்கு அவ்வூர் மிராசுதாரர் வீட்டில் 'தோட்டக்காரன்' வேலை உடல் கஷ்டம் அவனுக்கு ஒரு பொருட்டல்ல.

'அவள் போய்விட்டாளே என்ற வருத்தம்தான்.

கலங்கிய மனநிலையின் நினைவோடு, மிராசுதாரன் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

புறப்படும்போது அம்மா சொன்னது...

'கொழந்திங்க அலமு மேலயே நினைப்பா இருக்குங்க...'' — தன் நினைவைவிட குழந்தைகள் மிஞ்சி விட்டதாக உணர்ந்தான்.

எதையோ வீட்டில் நினைவு தவறி விட்டு வந்தாற் போன்ற படபடப்பு, பிள்ளைகள்மீது இரக்கவுணர்வும் ஏற்பட்டது.

அதிமிதமான அன்பின் நுழைவிடம் அற்று வீழ்ந்து விட்டதால் ஏற்பட்ட சலிப்பின் மிகுதி; தன்னையே அசட்டுச் செயல்களுக்கு ஆளாக்கி வருவதை நினைத்துப் பார்க்கும்போது ரங்குவுக்கு மனமே ஒரு பிடிக்குள் சிக்காமல் அலைந்தது.

நடந்துகொண்டே அவன் தனக்குள் வாதம் புரிந்து கொண்டான். அவனோடு ஒன்ருக இணைந்திருந்த மற்றொரு உயிர் பிரிந்தது, அவன் சுயநினைவையும் உடன் கொண்டு போய்விட்டது போலாகியது.

''டேய் ரங்கு! எவ்வளவு நேரமா பாக்கறது''—என்ற குரல் கேட்டு, அவன் தலைநிமிர்ந்த போதுதான் தனக்காக எஜமானர் காத்திருப்பதும், அவர் வீட்டு வாசற்படியில் வந்து நிற்பதும் தெரிந்தது. நினைவின் சூழலிலிருந்து மெல்ல அவன் தன்னை விடுவித்துக் கொண்டான்.

''ரங்கு! அப்படி யப்படியே எடுத்துப் போட்டிருக்கேன். பெட்டிப் படுக்கை யெல்லாம் சரியா எடுத்துக் கட்டி வை. இதோ சாப்பிட்டுட்டு வந்துடறேன்...'' வீட்டுக் கூடத்தினுள் போட்டிருந்த சாமான்களைச் சுட்டிக் காட்டிவிட்டு, மிராசுதாரர் டைனிங் அறைக்குள் சென்று விட்டார்.

''நீயும் கொஞ்சம் சாப்பிட்டுக்கோயேண்டா ......'' எஜமானியம்மா அவன்மீது வைத்த பரிவால் வற்புறுத்திக் கூப்பிட்டாள்.

''நான் வீட்லியே சாப்பிட்டுட்டு வந்துட்டேம்மா. அய்யா சாப்பிடட்டும். அதுக்குள்ளே நான் இதையெல்லாம் எடுத்துக் கட்டி வச்சுடறேன்'' என்று மனமார ஒரு பொய்யைச் சொல்லி வேலையில் ஈடுபட்டான்.

சாப்பாடு என்றவுடன்...அவனை மீண்டும் அவன் மனம் வதைத்தது.

அவனுக்கு உடலே எரிவது போலிருந்தது.

அவனை வட்டமிட்டு, மிராசுதாரரின் இரண்டு பையன்களும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆறு வயதான பெரியவன், தன் கையிலிருந்த ஆப்பிள் பழத்தைப் பந்து போல வீசியெறிய, அவனுக்கும் இளையவன் அதைப் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தான். ஒவ்வொரு பிடிப்புக்கு மிடையே பாக்கெட்டிலிருந்து பிஸ்கட்டை எடுத்து கடித்துத் தின்றுவிட்டு, மீண்டும் விளையாடினர்கள்.

பழம் நசுங்கி கன்னிக் கொண்டிருந்தது ரங்குவின் மனநிலையைப் போல. பிஸ்கட், வாயில் பாதியும் தரையில் பாதியுமாக விழுந்து கொண்டிருந்தது.

வேலைகளுக் கிடையே, அக்குழந்தைகளின் போக்கை ரங்கு கவனித்தான்.

சாப்பிட அமர்ந்த மிராசுதாரருக்கு அவர் மனைவி பரிமாறினுள். குனிந்து சற்று நேரம் சாதத்தையே பிசைந்து கொண்டிருந்த அவர், இடக் கரத்தை மடக்கி உட்கார்ந்து கொண்டிருந்த தொடை மீது முட்டியை ஊன்றியபடி தலையை உயர்த்தி 'ரவீ...ரமேஷ்!''—என்று பிள்ளைகளைக் கூப்பிட்டார்.

''இப்போ எதுக்கு அதுங்களைக் கூப்பிடறீங்க. கொச்சம் முந்தி தானே சாப்பிட்டுட்டு போனுனுங்க' —துவையலைப் பக்கத் தட்டில் வைத்தபடியே அவர் மனைவி சொன்னுள்.

''நீ ஒருத்தி! சொன்னு கூப்பிடுவியா அதை விட்டுட்டு......டேய் ரவீ...ரமேஷ்!''—மீண்டும் சப்தமிட்டுக் கூப்பிட்டார்.

கொஞ்சமும் செவி சாய்க்காமல் அவர்கள் விளையாடிக் கொண்டேயிருந்தார்கள். அவர்களைச் சுற்றி பிஸ்கட் தூள் தூளாய் சிதறிக் கிடந்தது பந்தாய் பயன்படுத்தப் பட்ட ஆப்பிள் மாவாய் நசுங்கி மிதிபட்டுக் கிடந்தது.

ரங்கு பெட்டியையும் படுக்கையையும் சரிசெய்து வைத்து காத்துக் கிடந்தான்.

மிராசுதாரரின் மனைவி அறையை விட்டுக் கூடத்துக்கு வந்து, இரண்டு குழந்தைகளையும் இரு கைக்குள் பிடித்து. உள்ளே அழைத்துச் சென்று கணவரின் எதிரில் விட்டாள்.

பிசைந்த சாதத்துள் ஒருபிடி எடுத்து அதில் துவையில் கொஞ்சம் வைத்து குழந்தைகளுக்கு ஊட்ட, உட்கார்ந்தபடியே மிராசுதாரர் நீட்டினர்.

15—6—69 காஞ்சி இதழில்

அறிஞர் அண்ணா அவர்களின்

நெற்றிக்கண்ணைக் காட்டினுலும்.....!

என்ற தம்பிக்கு மடல் இடம் பெறுகிறது.

இந்தக் கிழமை மூன்றும் நாளிலிருந்து கழகக் கலைஞரும், முதலமைச்சருமான மாண்புமிகு கருணாநிதி அவர்களுக்கு நாற்பத்தாறுவது, அகவை தொடங்குகிறது. பிறந்த நாளில் பல்லாயிரக் கணக்கானவர் நேரில் வந்து வாழ்த்துக் கூறி இருக்கின்றனர். கலைஞரின் வாழ்வில் 45 ஆண்டுகள் கழிந்துவிட்டன என்பதையும் இந்த நேரத்தில் நாம் எண்ணி கொள்ளவேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னர் கழகத் தோழர்

கள் எல்லாவிதத்திலும் அன்பு செலுத்தத் தக்கவர் கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், அளவுக்கும் அதிகமான கடும் உழைப்பை மேற்கொண்டிருக்கிறார், அகத்தாலும், புறத்தாலும், போதிய ஓய்வுடன் உடல் நலம் பெற்று, தமிழ் நாட்டுக்கு நல்வழி நல்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதன் மூலம், நாமும் அவருக்கு நம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

''வவ்வே...'' என்று குதறும் மொழியுதிர்த்து, தூரத்தில் தள்ளி நின்று, அப்பாவை ஏமாற்றிய பெருமிதத்தில் கைகொட்டி நகைத்து, தலையை ஆட்டி நின்றார்கள். குழந்தை விளையாட்டாக திடுமென எழுந்து சென்று இளையவனைப் பிடித்து ஒரே கையால் தூக்கி வந்து தொடை மீது அமர வைத்து கனிவோடு அவர் முகத்தைப் பார்த்தபடியே சோறு ஊட்டினார்.

''அப்பா! எனக்கு...!'' என்றபடியே பெரியவனும் உடன் வந்து தானாக உட்கார்ந்து. அப்பாவின் கையிலிருந்து வாங்கி, நாக்கைத் தட்டி சுவைத்துச் சாப்பிட்டான்,

தினம் தினம் இந்த அன்பு விளையாட்டைக்கண்டு ரசித்தவளாய் அவள் பரிமாறியபடி இருந்தாள்.

சன்னல் வழியாக இக்காட்சியைக் கண்டு வெட்கித்து, மனம் சூம்பி ரங்கு ஜடமென நின்றான்.

தன்னையும் குழந்தைகளையும் ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தவளைத் தலைநிமிர்ந்து பார்த்து, ''ஏண்டி அப்படி பாக்றே! குழந்தைகளுக்கு ஒருவாய் ஊட்டிட்டு பிறகு சாப்பிடறதுதான் திருப்தியாக இருக்கு. இல்லேண்ணா மனமே ஆறுதல் அடைய மாட்டேங்குது தெரியுமா!'' என்றார் மிராசுதாரர்.

அவள் புன்னகையோடு கிளர்ச்சியடைந்து மனநிறைவுடன் நின்றாள்.

குழந்தைகள் வாயைத்துடைத்துக் கொண்டு எழுந்து ஓடின. மிராசுதாரர் கையைக் கழுவிக் கொண்டு. ரங்கு நின்றிருந்த இடத்துக்கு வந்தார், ''என்ன...புறப்படலாமா?—என்றபடியே,

''தயார் எஜமான்''—என்று கையடக்கி வந்து நின்றான் ரங்கு அவனுக்குச் சார்வாங்கமும் அப்போது அடங்கித்தானிருந்தது.

நேரத்துக்கு இருந்த பஸ்ஸில் மிராசுதாரரை ஏற்றிவிட்டு ரங்கு வீட்டுக்குத் திரும்பினான்.

அப்போது—திண்ணையில் அவன் அப்பாவும், வீட்டினுள் அவன் அம்மாவும் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். செல்வி பாட்டியின் மார்பு மீது தலைவைத்து வலக்கையின் கட்டை விரலைச் சூப்பியபடி தூங்கிக் கொண்டிருந்தாள். அவர்களுக்குப் பக்கத்தில் ராஜா தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான்.

வெளிச் சுவரோரமாக ரங்கு மிதியடியைக் கழற்றிவிட்டான். அந்தச் சன்னமான ஓசையிலும் ராஜா கண் விழித்து எழுந்தமர்ந்து சற்று நேரம் கண்ணைப் பிசைந்து, பிறகு ஓடி வந்து, ''அப்பா......!'' என காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

இருளிலுள்ள பொருளை ஊடுருவும் பார்வையோடு அவனை வெறிக்கப் பார்த்து தூக்கி தோள் மேல் போட்டுக் கொண்டு அவனம்மாவை எழுப்பினான்.

கோமதியும் அவள் மார்புமீது தூங்கிக்கொண்டிருந்த செல்வியும் எழுந்துகொண்டார்கள்.

அடுப்புத் தட்டின்மீது வைத்த சிம்னி விளக்கு மங்கலாக ஒளியைக் கக்கிக் கொண்டிருந்தது.

'இன்னும் சாதத்தில் தண்ணி ஊற்றாமலே வச்சிருக்கேன். சாப்பிட்ரா கொழந்தே...!—'' என்று நயமாகக் கேட்டாள் அவனம்மா.

''கொஞ்சம் போடுங்கம்மா...'' என்று சொல்லிவிட்டு, செல்வியையும் தூக்கி மறு கையணைப்பில் வைத்துக் கொண்டான்.

கோமதி சோறு போட்டு வைத்தாள், அமர்ந்து. ரங்குவே குழம்பை யூற்றிப் பிசைந்து, முதலில் ராஜாவுக்கும் செல்விக்கும் ஊட்டிவிட்டான்.

அவர்களின் முகம் அப்படியொரு முக ஜொலிப்புடன் மாறியதை ரங்கு அப்போதுதான், மனைவி இறந்த பின் முதன் முறையாகக் கண்டு ரசித்தான்.

அவன் போக்குப் புரியாமல், கோமதி தனக்குள் ஆறுதல் அடைந்தவளாய் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரங்குவின் மனத்தைப் பிழிந்தெடுத்த சம்பவம் அவளுக்கு எப்படித் தெரியும்?

பாசம் எழும் உள்ளத்தைவிட, அதைக் கண்டு ரசிப்பவருக்குத்தான் அதிக திருப்தியென்பது கோமதியின் பார்வையிலேயே வெளிப்பட்டது.

---

3 ம் பக்கத் தொடர்ச்சி

யாவும் கட்சி நோக்கோடு செயல்பட்டிருப்பதாகவும் விரிவான முறையிலேயே விளக்கி இருக்கிறார்கள்.

தீவிர கம்யூனிஸ்டுகள் எனப்படுவோர், இடது கட்சியிலிருந்து வெளியேறி வந்திருப்பவர்கள் ஆவார்.

கம்யூனிஸ்டு கட்சியின் வலுவான கொள்கை என்று நம்பப்படுவது வன்முறைச் செயல்கள்மீது அவை ஈடுபாடு கொள்கின்ற பொதுத் தன்மையாகும். ஆனால், இவையெல்லாம் போதாது என்றும், இன்றும் தீவிரமான வன்முறைகள் செயல்பட வேண்டும் என்றும் கருதி மூன்றாவதுகட்சியைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

முழுக்க முழுக்க வன்முறைச் செயல்கள்மீதே நம்பிக்கை கொண்டு விட்டவர்களால், அமைதியான அரசியலை நடத்திப் போக முடியும் என்று நம்புவது பைத்தியக்காரத்தனமானதாகும்.

எல்லா வகையாலும் கேரள மக்களில் நலன்தான் பாதிக்கப்படுகிறது. எனவே, கேரள கம்யூனிஸ்டுகள் விரைவாக ஒரு நன்முடிவுக்கு வந்து, கேரள மக்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கேரளா வாழுமா? வாழவைக்கப்படுமா என்பது இப்போது ஒரு வினாக்குறியாகத்தான் இருக்க முடியும்.

Kamala Sugar Mills Ltd.,

(GLUCOSE FACTORY)

Amaravathi Nagar (P. O.)
Udumalpet S. Rly.,

Coimbatore Dt.

★

Liquid Glucose "Grade-A"

Now we have started production of our New Glucose "Grade-A" This Glucose is purified by "Demineraliser" which gives good colour and avoids stickness.

So it will be a great advantage to the consumers of glucose liquid for the manufacture of confectionary Sweets, Biscuits, Syrups Aerated waters and Pharmaceuticals.

Our Distributors for Madras, South Arcot
North Arcot and Chingleput Districts:

P. Singaravelu,
310, Wall Tax Road, Madras-3

OUR SALES BRANCHES AT:

MADURAI: 28-B, ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86. திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.